# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

தீபம் – 82 | ஆனி– 2023 | இல. 297, கடற்படைத்தள வீதி, திருகோணமலை | Email: theepamlink@gmail.com | TP: 026 222 1022/ 026 205 4362 | Rs. 40/=

## ஆயரின் செய்தி



கலாநிதி. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
மறைமாவட்ட ஆயர்

கிறிஸ்துவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே!

இயேசுவின் பெயரால் வாழ்த்துகின்றேன். தவக்காலம் பாஸ்கா காலம் என எமது ஆன்மீக வளர்ச்சியில் பல நிலைகளைக் கடந்து பயணித்துக் கொண்டிருக்கின்றோம். மேலும் செபமாலைப் பவனி மரியாவின் வணக்கமாதம், ஆலயத் திருவிழாக்கள் என பல சந்தர்ப்பங்கள் உருவாக்கப்படுகின்றன. இவற்றை முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமென்பதே எமது நோக்கம். இக்காலங்களில் அர்ப்பணிப்போடு அனைத்து ஒழுங்குகளையும் செய்து ஒவ்வொரு நிகழ்வுகளையும் பயனுள்ளதாக்கிய குருக்கள், இருபால் துறவிகள், பொதுநிலை நம்பிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்

☞ 2


## பதுளை மறைமாவட்டத்தின் புதிய ஆயராக அதிவண. ஜூட் நிசாந்த சில்வா அடிகளார்



பதுளை மறைமாவட்டத்திற்கு புதிய ஆயராக அதிவண. ஜூட் நிசாந்த சில்வா அடிகளார்22.04.2023 ஆம் திகதி பதுளை புனித மரியாள் பேராலயத்தில் மேதகு வின்சண்ட் பர்னாந்து ஆண்டகையினால் அருட்பொழிவு செய்யப்பட்டார்.

## செபிப்போம் வாழ்த்துவோம்

### குருத்துவ வாழ்வில் மாணிக்கவிழா கானும் அருட்பணி T. கிங்ஸிலி றொபட் அடிகளார்




அருட்பணி. T. கிங்ஸிலி றொபட் அடிகளாரின் குருத்துவ வாழ்வின் நாற்பதாவது நிறைவுக் கொண்டாட்டமானது 28.04.2023 அன்று மிக விமரிசையாக அவர் வளர்ந்த ஊராகிய சாம்பல்தீவு புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் திருப்பலியும் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.



## "நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை; நான் தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்"

## குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட அருட்பணி எமர்சன் றாகல் அடிகளார்

என்னைப் பின் செல்
என்ற இறையோன் குரலுக்கு
செவிசாய்த்து இதோ வருகிறேன்
என்று இதமாய் பதிலுரைத்து
குருகுலம் புகுந்து
மெய்மை இறைவனைப்
பற்றிக்கொண்டு தன் சிந்தனை
சொல், செயல், சீரமைத்து
உடல், பொருள், ஆவி
அனைத்தையும் அர்ப்பணித்த
அருட்பணியாளர்.



இறைவனில் இறைவனோடு இறைமக்களுக்காக, இறையரசை குருத்துவப் பணி மூலம் நிலை நிறுத்த தங்களை அர்ப்பணித்திருக்கும் அருட்பணி. எமர்சன் றாகல் திரு. திருமதி பேர்னாட் றாகல் ஜெசிமா றாகல் தம்பதிகளுக்கு 1992.07.04 ஆம் நாளன்று பிறந்தார். இவர் சீனக்குடா புனித அந்தோணியார் பங்கைச் சேர்ந்தவர். ஆரம்ப கல்வியை சீனக்குடா தமிழ் மகா வித்தியாலயம் மற்றும் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியிலும், உயர்தரக் கல்வியை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும் கற்றார். 2007ம் ஆண்டு மட்டக்களப்பு புனித சூசையப்பர் சிறிய குருமடத்தில் இணைந்தார். மறைமாவட்டம் பிரிந்ததன் பின்னர் திருகோணமலை புனித யோசேப்வாஸ் சிறிய குருமடத்தில் 8 மாதங்கள் கல்வி கற்று களுத்துறை DahamSevena இடைநிலை குருமடத்தில் 2013ல் இணைந்து ஒரு வருடம் கல்விகற்றார். 2014 – 2017 வரை கண்டி தேசிய குருமட மெய்யியல் பீடத்தில் மெய்யியல் கல்வியை கற்றார். அதன் பின் ஒரு வருடம் குச்சவெளி, கல்லராவ, செல்வநாயகபுரம், சிலாபம், தலைவில் ஆகிய இடங்களில் குருத்துவ உருவாக்கல் பயிற்சியினை பெற்றார். பின்னர் 2018 – 2022 வரை கண்டி தேசிய குருமடத்தில் இணைந்து இறையியல் கல்வியை நிறைவு செய்தார். ஒக்டோபர் மாதம் 1ம் திகதி 2022 ஆம் ஆண்டு புனித மரியாள் பேராலயத்தில் ஆயர் பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையினால் திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப்பட்டு 15.04.2023 அன்று குருவாக அபிசேகம் செய்யப்பட்டார். இவர் ஏற்றுக்கொண்ட இவரது பணிவாழ்வு சிறக்கவும் இறைவன் தாமே இவருடன் இருந்து வழிநடத்தவும் மன்றாடுவோம்.



## பத்திரிகை ஆசிரியரின் பேனா

எமது நாட்டிற்கு அந்நிய செலாவணியை அதிகம் பெற்றுத்தரும் ஏற்றுமதிப் பொருள் தேயிலையாகும். ஆனால் நாளாந்தம் குளிர், மழை, அட்டைப்பூச்சி, கடும் வெய்யில் என பெரும் தியாகங்களோடு தொழில் புரிகின்றார்கள் எமது மலையக மக்கள். நடப்பு ஆண்டு 2023 மலையக மக்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு 200 ஆண்டுகள் பூர்த்தியாகின்ற தருணத்தில்; அமரர் திரு. சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களை மறந்து விட முடியாது. அவருடைய கால கட்டத்தில் ஒரு காத்திரமான அரசியல் தலைமைத் துவத்தை கொடுத்திருந்தார். அவருடைய பேரன் ஜீவன் தொண்டமான் எமது திருமலை மாவட்டத்திற்கு முதல் தமிழ் ஆளுனராக நியமிக்கப்பட்டிருப்பது அந்த சமூகத்திற்கு கிடைத்த கௌரவமாகவே கருத வேண்டும்.

இவர்கள் இந்த மக்களின் அவலங்களை சிந்தித்துப் பார்க்க வேண்டும். மலையக தொழிலாளர்கள் எல்லோருக்கும் சொந்தமான வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை. இன்னும் முடக்கப்பட்ட வாழ்க்கை. மண்சரிவுகள், மின்சாரம், குடிநீர், கல்வி இவ்வாறான பல பிரச்சனைகளுக்கு இன்னும் முகம் கொடுக்கின்றார்கள். மலையக அரசியல்வாதிகள் தங்கள் வாக்குச்சீட்டுக்காகவே இந்த மக்களை பகடைக்காய்களாக பயன்படுத்துகின்றார்கள். இனியாவது இந்த மக்களின் துயர் துடைக்க அரசாங்கமும் இலங்கைவாழ் அனைத்து மக்களும் இவர்கள் மேல் அதிக கரிசனை கொள்ளவேண்டும்.

எமது முன்னைநாள் திருமறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அமரர் N.C அருள்வரதன் அடிகளாருக்கு எமது இதய அஞ்சலியை சமர்ப்பிப்பதோடு, அவரது இழப்பினால் வேதனையுறும் அனைத்து உறவுகளுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பதுளை மறைமாவட்டத்திற்கென பதுளை மறைமாவட்டத்திலிருந்தே தெரிந்தெடுக்கப்பட்ட புதிய ஆயர் பேரருட்திரு ஜுட் நிசாந்த சில்வா அடிகளாருக்கு எமது செபம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு; அடித்தட்டு மலையக மக்கள் மீது அதிக பரிவோடு கூடிய பணி சிறக்க வேண்டுகின்றோம்.

சுமார் ஏழு வருடங்களின் பின் எமது மறைமாவட்டத்திற்கென புதிய குரு அருட்பொழிவு செய்யப்பட்டிருக்கின்றார். புதிய குருவாகிய அருட்பணி. எமர்சன் றாகல் அடிகளாருக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இளமையும், கல்விப்புலமையும், மூன்று மொழிகளிலும் சரளமாகப் பேசத்தெரிந்த அடிகளாரின் பணி சிறப்புற அமைய மன்றாடுவோமாக. திருமலைத்தீப வாசக நெஞ்சங்களுக்கு எமது ஆசிகள்.

**ஆசிரியர்**
**அருட்பணி. றொஹான் பேர்ணார்ட்**


**திருமலைத்தீபம்**
**மறைக்கல்வி நடுநிலையம்,**
**இல 297, கடற்படைத்தள வீதி,**
**திருகோணமலை**

ஆசிரியர் - 026 222 1012
theepamlink@gmail.com


"இம்மாத மேற்கோள்கள் போராளி சேகுவேராவின் சிந்தனைகளிலிருந்து"

**ஆயரின் ……**

இவ்வருடம் எமது மறைமாவட்டத்திற்கு ஆன்மீக சிந்தனையாக "பொதுநிலையினர் ஆண்டு". என அழைத்துள்ளோம். பொதுநிலையினர் தமது கடமை, பொறுப்பு, உரிமை பற்றியும் திருஅவையின் வளர்ச்சியில் எவ்வாறு சிறப்பாக பங்களிக்கலாம் எனத் தெளிவு பெறவும் பல கருத்தரங்குகளும் கலந்துரையாடல்களும் வரும் காலங்களில் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. பங்கு மட்டங்களில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வுகளில் ஆர்வத்தோடு பங்கேற்று பயனடையும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மே மாதம் 21 முதல் 23 வரை நடைபெற்ற திருத்தந்தையின் பிரதிநிதி மேதகு பிறையன் உதயக்வே ஆண்டகையின் மறைமாவட்டத்திற்கான மேய்ப்புப்பணி விஜயம் சிறப்பாக அமைந்திருந்தது. புனித மரியாள் பேராலயம், ஆலயங்கள், கல்லூரிகள், குருக்கள், இருபால் துறவிகளுடனான சந்திப்பு என பல நிகழ்வுகள் நிறைவேறின. அனைத்தையும் திட்டமிட்டு ஒழுங்குசெய்த மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி போல் றொபின்சன் அடிகளுக்கு எமது நன்றி. இவரோடு இணைந்து ஒத்துழைத்த அனைத்துக் குருக்களையும் இருபால் துறவிகளையும் பொதுநிலை நம்பிக்கையாளர்களையும் நான் பாராட்டி நன்றி கூறுகின்றேன். எமது மக்களும் ஆர்வத்தோடு பங்கேற்று திருத்தந்தையின் பிரதிநிதியை வரவேற்று ஆசிபெற்றனர். அவரும் மனநிறைவோடு தனது விஜயம் பற்றிய தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்.

இவ்வேளை எமது குருவாகிய அருட்பணி N.C. அருள்வரதன் அடிகளாரை இழந்தோம். இவர் மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட மூத்த குரு. மட்டக்களப்பில் பல பங்குகளில் பணியாற்றி மறைமாவட்டம் பிரிந்தபின் மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையத்தின் இயக்குனராகப் பணியாற்றி பின் கன்னியா, இலிங்கநகர்ப் பங்குகளிலும் பணியாற்றினார். எழுத்தாற்றல் கொண்ட இவர் சிறுகதைகள், கவிதைகள், பாடல்கள் எழுதுவதில் சிறந்து விளங்கினார். இவரது இறப்பால் துயருறும் இவரது குடும்பத்தார், உறவினர், நண்பர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

கொவிட்-19, மற்றும் பொருளாதாரப் பிரச்சினை என பல நிலைகளையும் கடந்து பயணிக்கின்றோம். எமது மறைமாவட்ட ஆன்மீகம், மாணவர்களின் கல்வி, சமூகப்பணி எனும் எமது இலக்கிலிருந்து விலகிவிடாமல் ஆர்வத்தோடு செயல்படுவோம்.

ஆண்டவரின் ஆசீர் உங்களோடு என்றும் தங்க ஆசித்து முடிக்கிறேன்.

---

"நல்ல நிலம்" என்ற நூலில் இருந்து

# ஒரு வார்த்தை சொன்னால் போதும்

மறைநூல் அறிஞரும் பரிசேயரும் விபச்சாரத்தில் பிடிபட்ட ஒரு பெண்ணைக் கூட்டிக் கொண்டுவந்து நடுவில் நிறுத்தி, போதகரே இப்பெண் விபச்சாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிபட்டவள். இப்படிப்பட்டவர்களைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்பது மோசே நமக்குக் கொடுத்த திருச்சட்டத்திலுள்ள கட்டளை. நீர் என்ன சொல்கிறீர் என்று கேட்டனர். முதல் ஆள் பேசி முடித்தார். அப்படியே இரண்டாமவர், மூன்றாமவர் ராபி விபச்சாரம் செய்தவர்களை மோசேவும் அவர் கொடுத்த கட்டளைகளும் கல்லால் எறிந்து கொல்வதுதான் நியாயம் என்று சொல்கின்றன. நீர் என்ன சொல்கிறீர்? இயேசு அமைதியாய்ப் பேசாமல் இருந்தார். பரிசேயர்கள் போதகரே, நீர் என்னதான் சொல்கிறீர். திமிர்வாதக் காரருடைய பாவங்களை மன்னித்தீர், எழுந்து நடந்தான். அதைப் போல இவளுடைய பாவங்கள் மன்னிக்கப் படலாம். ஆனால் மோசேயினுடைய கட்டளையை இவளும் தான் கடைப்பிடிக்க வேண்டுமல்லவா? அதை எப்படி மன்னிக்க முடியும் என்று சொல்லி முடித்தார். இயேசு அமைதியாய் எதையோ தரையில் எழுதிக் கொண்டிருந்தார்.

**விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்**

இதுவரையிலும் தன்னையும், தன்னுடைய குற்றத்தையும் பட்டியலிட்டுப் பார்த்த கூட்டத்தை நிமிர்ந்து பார்த்தாள். குற்றவாளிகளெல்லாம் சுற்றி நின்றுகொண்டிருக்க, எனக்கு மட்டும் கொலை தண்டனையா? என்று மனம் வெதும்பி மக்களைப் பார்த்தாள்.

**இயேசு**

இப்பொழுதுதான் அவர் நிமிர்ந்து பார்க்கிறார். அவருடைய பார்வையில் குற்றம் சாட்ட வந்தவர்களில் ஒருவனும் நீதிமானாய் இல்லை, மக்களில் பலர் பரிதாபப்படுவதையும், பாவப்பட்டு, ஆனால் பரிகாரத்திற்காகவே நின்று கொண்டிருந்த பாவியையும் பார்த்தார், பட்டென்று உங்களில் குற்றமில்லாதவன் முதல் கல் எறியட்டும் என்று சொல்லி முடித்தார். சொல்லி முடித்ததுதான் தாமதம் எல்லோருக்கும் பகீர் என்றது. இதுவரையில் அடுத்தவரில் மட்டும் குற்றத்தைக் கண்டு வந்தவர்கள் தங்களுக்குள்ளே பார்க்க ஆரம்பித்தார்கள். மக்களுள் பலருக்கு அவர் என்ன சொன்னார் என்பது புரியவில்லை. இன்னொரு முறை எல்லோரும் தங்களுக்குள்ளே, உங்களில் குற்றமில்லாதவன் முதல் கல் எறியட்டும் என்று சொல்லி பார்த்துக் கொண்டார்கள். விபரம் புரிந்தது, பரிசேயர்களும் மறைநூல் அறிஞர்களும் தங்களையும் இயேசுவையும் பாவியான விபச்சாரியையும் சுற்றி நின்று கொண்டிருந்த மக்களையும் கடைசியாயத் தங்களது கையில் இருந்த கற்களையும் மாறி மாறி பார்த்துக்கொண்டார்கள்.



அடடா, இதுவரையில் மற்றவர்களைத் தானே பாவி என்று பார்த்தோம் அந்தப் பட்டியலில் நாம் தானே பெரிய பாவி என்று எண்ணிக்கொண்டு கையில் இருந்த கல்லைக் கீழே போட்டுவிட்டு வெதும்பிய மனத்தோடு ஒருவர் பின் ஒருவராக வெளியேறிச் சென்றார்கள். மக்கள் கூட்டமோ, பரவாயில்லை ஓர் உயிர் காக்கப்பட்டு விட்டது. ஆனால் நாம் எப்போது மனம் திரும்பப் போகிறோம் என்ற கேள்விக் கணையோடு கலைந்து சென்று கொண்டிருந்தது. கூட்டமே கலைந்திருந்தது.

**விளைவு**

இயேசு ஏறெடுத்துப் பார்த்தார். அந்தப் பெண்மணி மட்டும் தனியாய் நின்றுகொண்டிருந்தாள். அம்மா எவருமே உன்னைத் தீர்ப்பிடவில்லையா? இல்லை ஆண்டவரே என்ற பதிலும் வெளிவந்தது. அந்த ஆண்டவரே என்ற சத்தத்தில் அவளுடைய விசுவாசமும் ஏற்றுக்கொள்ளும் தன்மையும் மனந்திரும்பிய வாழ்க்கையும் வெளிப்பட்டன. கடைசியாய் அவர் சொல்லி முடித்தார். நானும் உன்னைத் தீர்ப்பிடேன் நீ போகலாம். இனி பாவம் செய்யாதே.

நான் யாரைத் தீர்ப்பிடப் போகிறேன்?
என்னை யார் தீர்ப்பிடப் போகிறார்?

# தந்தை செல்வாவின் இறப்பின் 46வது ஆண்டு நினைவுக் கட்டுரை 26.04.2023

**அறிமுகம்:**
ஈழம் வாழ் தமிழ் மக்களாலும், தமிழ் பேசும் மக்களாலும் ‘தந்தை செல்வா’ என்று கொண்டாடப்படுகின்ற உயர்மிகு சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்களின் பிறப்பின் 125வது தினம் 26.04.23 அன்று யாழ் நகரில் இடம்பெற்றது.

இங்கு ‘தேசிய இனம்’ என்று தமிழ் இனத்தை பேச வைத்ததே தந்தை செல்வா ஆற்றிய மிகப்பெரும் சாதனையாகும். முன்னைநாள் தென்னிந்திய திரு அவை யாழ்ப்பாண மறைமாநில ஆயர் பேரருட்திரு D. J. அம்பலவாணர் அவர்கள் தந்தை செல்வாவின் இறுதிப் பயணத்தின் போது 1977ஆம் ஆண்டு உதிர்த்த வார்த்தைகள் ஆரம்பிக்கின்றேன். “He died like Moses himself without reaching the promised land but the vision he saw, he leaves behind as the heritage and challenge to his people” அதாவது, தந்தை செல்வா அவர்கள் விவிலியத்தில் வருகின்ற மோசே போன்று வாக்களிக்கப்பட்ட நாட்டினை காணமலே இறந்து போனார். ஆயினும் தான் கொண்டிருந்த எதிர்நோக்கினை தன் பின்னாலுள்ள மக்களுக்கு பிறப்புரிமைச் சொத்தாகவும், சவாலாகவும் விட்டுச் சென்றுள்ளார். அத்தகைய சவால் நிறைந்த பணியில் நிறைந்த வலிகளுடனும், இழப்புக்களுடனும், துயர் நிறைந்த சுமைகளுடனும் அதேவேளையில் அதே உத்வேகத்துடனும், விடியலுக்கான வேட்கையுடனும் இன்னும் தமிழ்த் தேசிய இனம் பயணிக்கின்றது என்றால் அது தந்தை செல்வா தமிழ் மக்கள் மீது பாய்ச்சிய மிகப் பெரிய சாதனையாகும்.

அரசியல் அமைப்பினை உருவாக்கிக்கொண்டு, அதனூடாக தங்களது கோரிக்கைகளை அவ் ஆணைக்குழுவிற்கு முன்வைப்பதற்கு தீர்மானித்தார்கள். அதனூடாக தோற்றம் கண்டதே திருவாளர் G. G. பொன்னம்பலம் அவர்களைத் தலைவராகக் கொண்டும், தந்தை செல்வா அவர்களை முதன்மை அமைப்பாளராகவும் கொண்டு உருவாக்கப்பட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியாகும். ஆயினும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியுடன் ஆரம்பித்த அரசியல் பயணமானது நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. G. G. பொன்னம்பலத்துடன் ஏற்பட்ட கொள்கை முரண்பாடு (மலையகத் தமிழர்களின் பிரஜாவுரிமை) காரணமாக தமிழர்களின் அரசியல் பயணத்தை சரியான பாதையில் கொண்டு செல்வதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியினை (Federal Party) சமஷ்டி கட்சியினை 1948இல் ஆரம்பித்தார். உண்மையான தலைவன் என்பவன் யாரென்றால், “A leader is one who knows the way, goes the way and shows the way.” அதாவது தலைவன் என்பவன் தான் பயணிக்கும் வழி தெரிந்தவன், அவ்வழியில் பயணிப்பவன், அவ்வழியினைக் காண்பிப்பவன்” ஆவான். தந்தை செல்வாவும் அத்தகைய ஒரு தலைவரே. அவர் தமிழரசுக் கட்சியினை உருவாக்கி ஆற்றிய கன்னியுரையில் “இப்போதிருக்கும் நிலையில் யாம் விடுதலை பெறுவதற்கு ஒரு சுதந்திரத் தமிழரசை நிறுவுவது இன்றியமையாதது என்பது எமது திடமான நம்பிக்கையாகும்... தமிழ்பேசும் மக்கள் இந்த நாட்டில் இப்போது எப்படியான நிலைமைகளுக்கிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை கூர்ந்து நோக்கினால், இதுதான் ஒரேயொரு வழி – வேறு எந்தவிதமான பரிகாரமும் கிடையாது – என்பது விளங்கும்” என்கிறார். இதனை எதிர்ப்பு அரசியல் என்று சொல்ல முடியாது மாறாக, சுதந்திரமான வாழ்வுக்கான விடுதலை தேடிய அரசியல் பயணமாகும்.



வழிகோலின. ஆயினும் தொடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்ட முட்டுக்கட்டைகள் அவற்றைத் தவிடுபொடியாக்கின. இதனைக்குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திபால சிறிசேன அவர்கள் “அன்றைய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் உரிய முறையில் நடைமுறைப் படுத்தியிருந்தால் இன்று ஆயுதப் போராட்டம் உருவாகியிருக்காது என்றும் தமிழ் இளைஞர்கள் துப்பாக்கி ஏந்தியிருக்க மாட்டார்கள் என்றும், பிரபாகரன் தோன்றியிருக்க மாட்டார். சிங்கள மக்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றால் தமிழ் மக்களின் உரிமையை அவர்களிடம் கையளிக்க வேண்டும் என்றும் இன்னொரு யுத்தத்தைத் தடுக்க இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்பட வேண்டுமென்றும் கூறுகிறார்” என அச்செய்தி செல்கிறது. ஆனாலும் இவையெல்லாம்

## தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை வரலாற்றில் தந்தை செல்வநாயகம் சாதித்தவை

**சுருக்க வாழ்வு வரலாறு:**

தந்தை செல்வா அவர்களின் இளமைக்காலம், அவரது ஆரம்பம் பற்றி அதிக நேரம் எடுத்துக்கொள்ளா விட்டாலும் இன்றைய இளம் சமூகத்தினரின் தேவை கருதி அவரைப்பற்றி ஒரு சில விடயங்களைத் தொட்டுவிட்டு விடயத்திற்குள் நுழையலாம் என எண்ணுகிறேன். மலேசியாவில் 31.03.1898இல் பிறந்த தந்தை செல்வா யாழ்ப்பாணத்தில் வளர்ந்தார். ஆரம்பக் கல்வியை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் பின் யாழ் பரி யோவான் கல்லூரி, கல்கிசை புனித தோமாஸ் கல்லூரி ஆகியவற்றிலும் தொடர்ந்தார். பின்னர் இலண்டன் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி விஞ்ஞானப் பட்டதாரியாக 1918ஆம் ஆண்டில் வெளியேறினார். தனது இளைய சகோதரன் சுகயீனம் உற்றபோது, அவரைச் சென்று பார்ப்பதற்கான விடுமுறை வழங்க மறுக்கப்பட்டபோது, தனது ஆசிரியப் பதவியினையே இராஜினாமாச் செய்துவிட்டு, நேர்மைக்கு எதிரான செயற்பாடுகளுக்கு எதிராக அன்றே குரலெழுப்பி இளமைப்பருவம் தொடங்கியே நேர்மையான அரசியலுக்கு வித்திட்ட கோமகனானர். பின்னாளில் ஒரு சட்டத்தரணியாகவும் கடமைப்பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். 1927இல் எமிலி கிரேஸ் குமாரகுலசிங்கம் என்பவருடன் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டவர், தமது திருமண வாழ்வினூடாக நான்கு ஆண் பிள்ளைகளுக்கும், ஒரு பெண் பிள்ளைக்கும் தந்தையானர்.

**அரசியல் வாழ்வு:**
அவரது அரசியல் பயணமானது பிரித்தானிய அரசின் சோல்பரி ஆணைக்குழுவின் சட்டவாக்கத்துடன் 1944இல் ஆரம்பமாகியது. இக்காலகட்டத்தில் தமிழர்கள் தங்களுக்கென ஓர்

அவரது புதிய அரசியல் பயணமானது மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமையைப் பறித்த பிராஜாவுரிமை சட்டத்திற்கெதிராக வாக்களித்ததுடன் ஆரம்பமாகியது. அதற்காக இறுதிவரை போராடினார். சட்டம் நிறைவேறியது. அதனைக் குறித்த தந்தையின் வாக்கு யாதெனில் “தமிழ்பேசும் மக்களுக்கு இரண்டு வழிகளே உள்ளன. ஒன்று நிபந்தனையற்ற சரணாகதி, (கோழைகளின் வழி) மற்றையது தமிழ் பேசும் மக்களை, அரசியலுரிமையற்றவர்களாகச் செய்யும் இப்போதைய அரசியலமைப்பிலிருந்து மீட்பதற்காக, ஒரு இயக்கத்தை ஆரம்பிப்பதாகும். பிந்திக் கூறிய வழி கடினமானது, ஆனால் வீரர்களுக்குரிய வழி அதுவேயாகும். அதுமட்டுமல்லால், தேர்தல் காலத்தில் தமிழ் மக்கள் காட்டிய வழியும் அதுவே” என்று ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றார். அவ்வழியில் பயணிக்கப் புறப்பட்டதே அவரால் உருவாக்கப்பட்ட தமிழரசுக் கட்சியுமாகும். இன்னமும் அதே வழியில் பயணிப்பதுதான் தந்தை செல்வா அவர்களுக்கு தமிழரசுக் கட்சி வழங்கக்கூடிய மாபெரும் கௌரவமும், மரியாதையுமாகும்

1956இல் கொண்டு வரப்பட்ட தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிராக சாத்வீகப் போராட்டத்திற்கு அழைப்புவிடுத்து, ஒடுக்கப்படுகின்ற தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காக ஜனநாயக ரீதியில் தீவிரமாகக் குரல் கொடுத்தார். இப்போராட்டத்திற்கு முகம் கொடுக்க முடியாமல் பண்டா – செல்வா ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டாலும், இனவாதிகளின் கடுமையான எதிர்ப்பின் காரணமாக கிழித்தெறியப்பட்டது. அதனைத் தொடர்ந்து வந்த டட்லி – செல்வா ஒப்பந்தமும் அவ்வாறு கடுமையான எதிர்ப்பின் காரணமாக கைவிடப்பட்டமை வரலாறு. ஆயினும் தந்தை செல்வாவும் அவரைச் சார்ந்தவர்களும் பல்வேறு விதமான அடக்குமுறைகளையும், வன்முறைகளையும் தாங்கிக்கொண்டு மேற்கொண்ட அறவழிப் போராட்டங்கள் தந்தை செல்வா அவர்கள் முன்வைத்த சமஷ்டி முறையிலான தீர்வுக்கு அன்றைய காலகட்டத்தில் தமிழரின் வலிதோய்ந்த வரலாற்றில் சிங்களத் தலைமைகளின் காலங்கடந்த ஞானமாகவே அமைகின்றன.

தந்தை செல்வா அவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தகள் யாவுமே தோல்வியில் நிறைவடைந்ததன் பயனாக 1976இல் அனைத்து தமிழ் கட்சிகளும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்கிற பெயரில் தனித் தமிழீழத் தீர்மானமான வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு வந்தன. அதன்படி வடக்கு, கிழக்கு பாரம்பரிய தமிழர் தாயகத்தில் இறைமை கொண்ட தன்னாட்சி அரசு அமைப்பதென தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானத்திற்கான அங்கீகாரத்தை 1977இல் நடந்தேறிய பாராளுமன்றத் தேர்தல் தமிழர் நிலப்பரப்பை பதிலாக அளித்தமை வரலாறாகும். அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அடுத்த வருடத்தில் தந்தை செல்வா அவர்கள் காலமானார். அறவழியில் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள் யாவும் தோல்வியுற்ற நிலையில் அடுத்த நிலையில் ஆயுதப் போராட்டம் களம் கண்டது. இதனைத் தந்தை செல்வா அவர்களும் முன்னெதிர்வு கூறினார். அதன் விளைவுதான் தழிழர் தாயகத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஆயுதவழி விடுதலைப் போராட்ட வடிவம். அதனால் ஏற்பட்ட அழிவுகளும், மரணங்களும், காணாமல் ஆக்கப்பட்டோரும், இன்றும் உறவுகளைத் தொலைத்துவிட்டு அவர்களுக்காக ஏங்கித் தவிப்போரும் என்ற தமிழ் மக்களின் துயரம் தீர்ந்தபாடில்லை. அதுவே 2009 முதல் முள்ளிவாய்க்கால் வழியாக தமிழர் மனங்களில் கலந்துவிட்டது என்பது என்னவோ உண்மைதான்.

தொடரும்...

**அருட்பணி அ. அ. நவரெத்தினம்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**

**உன்னால் செய்ய முடியாததை, கடைப்பிடிக்க முடியாததை, மற்றவனிடம் எதிர்பார்க்காதே...!**

# நிலையற்ற வாழ்வில் மனிதம் எங்கே?



நிலையற்ற வாழ்வில்
நீதியும் நியாயமும் நேர்மையுமாய்
நீவீர் வாழ்வீராக – என்றனர்!
வாழ்வியலாளர்கள் – ஆம்!
அப்படியே வாழ்தேன்
உண்மை பேசினேன்.
உதவாதவன் என்றார்கள்.
நியாயம் சொன்னேன், நீ நீதிவானா – என்றனர்!

ஊருக்கு உண்மையை உணர்த்த
உருகி வழிகிறேன் செவிமடுக்க யாருமில்லை?
சிதறிப்போகிறது – என் சிந்தை!
ஊர் ஒருமைப்பட்டு நண்பர்கள், உறவு வலுப்பெற்று
உலகிற்கு உதாரணமாக – என்கிறேன்!
நீ வாயை மூடிக்கொள் என்கின்றார்கள்

அடுத்தவரை விமர்சிப்பதே வழக்கமாயிற்று
உன்னை விமர்சி, மனிதமாய்
மண்ணில் வாழ முயற்சி செய் - பிறரை
விமர்சிப்பவன் உன் வாழ்வில் - நீ
உன்னை இழந்து விடுவாய் - என்பதை
மனதில் கொள்!

மனம் அமைதி கொள்ள மதம் - என்கிறேன்
நேரத்தை செலவிட வேறு விடயம்
இல்லையா என்று கேட்கின்றான்
மதி கெட்டவன்!
ஒன்றை மட்டும், உனக்கு கூறுகிறேன்
இறைவனைப் பற்றிக்கொள் அப்போது
உனக்கு ஞானம் பிறக்கும்
இதிலிருந்து விடுபட..........



**அ. ஜெயநாயகம் றோயல் டானியல்**
**உவர்மலை**

## மறைக்கல்வி நடுநிலைய அறிவித்தல்கள்

- விவிலிய அறிவுப்போட்டியில் தேசிய ரீதியில் பங்குபற்றி வெண்கலம், வெள்ளி, தங்கம் போன்றபரிசுகளை தட்டிக்கொண்ட பிள்ளைகள் மற்றும் அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்குமான கௌரவிப்பு எதிர்வரும் 15.07.2023 Jubille hall ல் இடம்பெறவுள்ளது.
- மறைமாவட்ட திருவிவிலிய வினாவிடைப் போட்டி ஒவ்வொரு பங்கிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு இடம்பெறவுள்ளது.

திகதி - 01.07.2023 சனிக்கிழமை
நேரம் - காலை 9.00 மணி

தரம் - 9,10,11 தமிழ் மொழியும், ஆங்கில மொழியும்
தரம் - 6,7,8 ஆங்கில மொழி
இடம் - திருமறைக்கல்வி நடுநிலையம் திருகோணமலை

தரம் - 6,7,8 தமிழ் மொழி
இடம் - புனித மரியாள் பேராலயம் திருகோணமலை



# படித்ததில் பிடித்தது



ஒரு நாள் ஆபிசில் வேலை செய்யும் பணியாட்கள் நோட்டீஸ் போர்டில் ஏதோ எழுதி இருக்கிறதே என்று பார்க்க சென்றனர். அதில் உங்கள் வளர்ச்சிக்கு இடையூராக இருந்த நபர் நேற்று காலமானார். அடுத்த கட்டிடத்தில் அவர் உடல் வைக்கப்பட்டுள்ளது. அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளவும் என்று எழுதி இருந்தது.

## மாற்றம்

நம் வளர்ச்சிக்கு தடையாக இருந்த நபர் யாராக இருக்கும் என்று அவர்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது. அனைவரும் அடுத்த கட்டிடத்திற்கு சென்றனர். சவப்பெட்டி வைத்திருக்கும் இடத்தை நோக்கி ஒருவர் பின் ஒருவராக செல்ல ஆரம்பித்தனர். சவப்பெட்டியை நெருங்க நெருங்க, நம் வளர்ச்சிக்கு தடையாக இருந்தவன் யாராக இருக்கும். நல்ல வேளை அவன் இறந்துவிட்டான் என்று நினைத்தபடியே முன்னோக்கி சென்றனர்.

சவப்பெட்டியினுள் எட்டி பார்த்தவர்களுக்கு தூக்கி வாரிப் போட்டது. அதில் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி மட்டுமே இருந்தது, சவப்பெட்டியினுள் யார் எல்லாம் பார்க்கிறார்களோ அவர்கள் முகமே அதில் தெரிந்தது. கண்ணாடி அருகில் ஒரு வாசகம் எழுதி இருந்தது.



"உங்கள் வளர்ச்சிக்கு நீங்கள் மட்டுமே காரணம். நீங்கள் வளர வேண்டும் என்றால் அது உங்கள் கையில் மட்டுமே உள்ளது. உங்கள் வளர்ச்சியை உங்களை தவிர வேறு யாராலும் தடுத்து நிறுத்த முடியாது." என்று எழுதியிருந்தது. உங்கள் வாழ்க்கையை உங்கள் முதலாளியால் மாற்ற முடியாது. உங்கள் நண்பர்களாலும் மாற்ற முடியாது.

**நீங்கள் நினைத்தால் மட்டுமே உங்கள் வாழ்வை மாற்ற முடியும்!**



ஒரு முறை ஆபிரகாம் லிங்கனிடம் அறிஞர்கள் சிலர் படிப்பது எதற்காக? படிப்பதால் பணம் கொட்டப் போவதில்லை. பின்னர் ஏன் எப்போதும் படித்துக் கொண்டே இருக்கிறீர்கள் என்று கேள்வியை கேட்டனர்.

அதற்கு ஆபிரகாம் லிங்கனின் பதில்!

"நான் பணம் சேர்ப்பதற்காகப் படிக்கவில்லை, பணம் வரும் போது எப்படிப் பண்போடு வாழ வேண்டும். என்பதைத் தெரிந்து கொள்ளவே படித்துக் கொண்டிருக்கிறேன் என்று பதில் கூறினார். ஒரு மிகச்சிறந்த மேதையின் ஆளுமையான பதில்.

**ஒருவரின் காலடியில் வாழ்வதை விட... எழுந்து நின்று உயிரை விடுவது எவ்வளவோ மேல்**

# மனிதன் மிக அழகானவன்

## இன்னுமா தயக்கம்?

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே!

“இந்த உலகில் மிகவும் அழகானது எது?” என்று கேட்டால் நீங்கள் என்ன சொல்வீர்கள் உங்கள் மனதில் தோன்றிய விடையை நீங்கள் தனியாக வைத்துக் கொள்ளுங்கள், இப்போது இந்த விடையை உங்களுக்குத் தெளிவு படுத்துவதற்காக நான் உங்களுக்கு ஒரு மூன்று விதமான இடங்களைக் கூறுகின்றேன்.

**முதலாம் இடம்:**

“இந்த உலகத்தில் மிக அழகான இடம் எது” என்று கேட்டால் நம் உள்ளத்தில் ஒரு கற்பனை விரியும், அப்படி ஒரு இடத்தை நம் மனதில் தேர்ந்து கொள்வோம். அது மிகவும் இயற்கை அழகுகள் நிறைந்த இடமாக இருக்கலாம். உயர்ந்த மலை உச்சியாக அல்லது அழகான பள்ளத்தாக்காக, ஆற்றங்கரையாக, அழகிய வயல்வெளியாக அல்லது அடர்ந்த மிக உயரமான மரங்கள் நிறைந்த ஒரு காடாக இருக்கலாம். உங்கள் மனதிற்கு மிகவும் பிடித்த இடமாக நினைத்துக் கொள்ளுங்கள். அந்த இடத்தில் நீங்கள் மட்டும் தங்கியிருக்கப் போகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். உங்களுக்கு மிகவும் பிடித்த இடம் தான் ஆனால் எத்தனை நாள் மனிதர்கள் யாருமே இல்லாத அந்த மிகவும் அழகான இடத்தில் உங்களால் தங்கியிருக்க முடியும்? சற்று யோசித்துப் பாருங்கள்!

**இரண்டாம் இடம்:**

இப்போது இயற்கை அழகுகளுக்கு அப்பால், மனிதர்களால் உருவாக்கப்பட்ட ஒரு அழகான இடமாக அனைத்து வசதிகளும் நிறைந்த ஒரு இடத்தை கற்பனை செய்து கொள்ளுங்கள். வேளாவேளைக்கு சாப்பாடு செய்து தருவதற்கு ஒரு இயந்திரம், உங்கள் அன்றாட தேவைகளை நிறைவு செய்வதற்கு ஒரு இயந்திரம் என்று அந்த இடம் முழுவதும் இயந்திரங்களால் நிறைந்திருக்கின்றன. உங்கள் அனைத்துத் தேவைகளையும் அந்த இயந்திரங்கள் பூர்த்தி செய்துவிடும் என்றே வைத்துக் கொள்வோம். மிகவும் நவீனமான, மிகவும் விலையுயர்ந்த இயந்திரங்களால் நிறைந்துள்ள அந்த இடத்தில் வேறு மனிதர்கள் யாருமே இல்லாமல் உங்களால் எத்தனை நாட்கள் வாழ்ந்து விட முடியும்?

**மூன்றாவது இடம்:**

இப்போது, மூன்றாவதாக ஒரு இடம்: அந்த இடத்தில் மிக அழகான இயற்கை வளங்கள் இல்லை, மிக உயர்ந்த மதிப்புள்ள இயந்திரங்களும் இல்லை சொல்லப்போனால் பணத்தின் பகட்டோ மனதை மயக்கும் ரம்மியமான இயற்கை அழகுகளோ இல்லை. ஒரு சாதாரண வீடு, அந்த வீட்டில் நீங்களே உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். ஆனால் அந்த வீட்டில் உங்கள் அன்புக்குரிய மனிதர்கள் குறிப்பாக உங்கள் குடும்ப உறுப்பினர்களாகிய அம்மா, அப்பா, குழந்தைகள் எல்லோரும் இருக்கின்றார்கள் என்று வைத்துக் கொள்வோம். இந்த இடத்தில் உங்களால் எத்தனை நாட்கள் வாழ முடியும்.

**எந்த இடம் மிகவும் சிறந்தது?**


மேற்சொன்ன மூன்று இடங்களில் நீங்கள் எந்த இடத்தை வாழ்வதற்காகத் தேர்ந்தெடுப்பீர்கள்? சந்தேகத்திற்கு இடமில்லாமல், மனிதர்கள் வாழும் இடத்தைத் தான் தேர்ந்தெடுப்போம். மற்ற இடங்கள் எவ்வளவு தான் அழகாக இருந்தாலும் அவற்றை ஒரு நாள் இரண்டு நாட்கள் வேண்டுமென்றால் இரசிக்கலாம். அதற்கு மேல் அது நமக்கு மன உளைச்சலைத் தருவதாக மாறிவிடும்.

அப்படியானால், இப்போது நமக்குப் புரிந்திருக்கும் மனிதர்களே இந்த உலகில் மிகவும் அழகானவர்கள் நமது மனதிற்கு விருப்பமானவர்கள். மனிதர்கள் கையால் ஆன பொருட்களோ மனிதர்கள் இரசிக்கும் இந்த இயற்கையோ எதையும் விட நம் உடன் வாழும் மனிதர்களே மிகவும் அழகானவர்கள். எனவே தான் நம் உலகில் உள்ள அனைத்து புத்தகங்களிலும் முதன்மையான புத்தகமான விவிலியம் மனிதர்களோடு வாழும் வாழ்க்கை முறையைப் பற்றியே விளக்குகின்றது. அழகிய பொருட்களைப் பற்றியோ, இயற்கையைப் பற்றியோ அதில் நியமங்கள் இல்லை, மாறாக நாம் ஒருவரோடு ஒருவர் எப்படி வாழ வேண்டும் என்பதைப் பற்றியே அது குறிப்பிடுகின்றது. அத்தகைய புத்தகத்தையே நாம் “இறைவார்த்தை” “வாழ்வின் புத்தகம்” “உயிருள்ள வார்த்தைகள் அடங்கிய புத்தகம்” என்று அடைமொழியிட்டு அழைக்கின்றோம்.













27

அப்படியானால் மனிதன் எவ்வளவு அழகானவன், எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவன் என்பது நமக்குப் புரியும். எனவே தான் இறையியலாளர்கள் கூறுவர், “மகிழ்ச்சி நிறைந்த வாழ்வு வாழவேண்டுமென்றால், பொருட்களை பயன்படுத்துங்கள், மனிதர்களை அன்பு செய்யுங்கள்!” என்று. பல தருணங்களில் நாம் மனிதர்களின் மாண்பினை உணராத காரணத்தினால், பொருட்களை அன்பு செய்கின்றோம், மனிதர்களைப் பயன்படுத்துகின்றோம். இந்த முரண்பாடான வாழ்க்கை முறை நம் வாழ்வில் பல பிரச்சனைகளை உண்டாக்குகின்றது.

**மனிதனே மிக உயர்ந்தவன்:**

விவிலியத்தில் தொடக்க நூலின் தொடக்கத்தில், இறைவன் இந்த உலகைப் படைக்கும் நிகழ்வைப் பற்றி வாசிக்கின்றோம். இறைவன் இந்த உலகின் ஒவ்வொன்றையும் தனது வார்த்தையால் படைக்கின்றார். இறுதியாக, படைப்பின் உச்சமான மனிதனைப் படைக்கின்றார். அவ்வாறு மனிதனைப் படைப்பதற்கு முன், இறைவன் தன் கைகளால் ஒரு உருவத்தை உருவாக்குகின்றார். அந்த உருவத்திற்கு தனது உயிர் மூச்சை ஊதி உயிர் கொடுக்கின்றார். எனவே தான் மற்ற அனைத்திலும் மனிதர்களாகிய நாமே முக்கியத்துவம் பெறுகின்றோம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். எனவே ஒவ்வொரு மனிதனிலும் ஒரு ஆன்மா உள்ளது. அந்த ஆன்மா அழிவற்றது, கடவுளோடு இணைந்தது. நாம் அந்த ஆன்மாவாகவே இருக்கின்ற காரணத்தினால். நாம் மிகவும் மதிப்புள்ளவர்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**மனிதர்களை மனிதர்கள் மதிக்க வேண்டும்:**

இன்று இந்த உலகில் மிகவும் உயர்ந்த மற்றும் அழகான படைப்பாக படைக்கப்பட்டுள்ள மனிதனை நாம் மனிதனாக, அதாவது இந்த உலகின் அதி உயர்ந்த படைப்பாக நாம் பார்க்க வேண்டும் என்பதே இறைவனின் ஆசையாக இருக்கிறது. அவர் நம்மை அனைத்து உயர்ந்த பண்புகளாலும் அணி செய்துள்ளார். இந்த உயர்ந்த பண்புகளால் மனிதன் மிகவும் அழகானவனாக இருக்கின்றான். இந்த அலங்காரங்கள் கலைகின்றபோது மனிதனின் அழகும் கலைகின்றது. நாம் பிறரிடம் காட்டும் அன்பு நம்மை அழகானவர்களாகக் காட்டுகின்றது. நாம் நம் நடத்தையில் காட்டும் நேர்மை நம்மை விரும்பத்தக்கவர்களாகக் காட்டுகின்றது. பிறர் மீது நாம் காட்டும் கருணை, மரியாதை, ஈடுபாடு போன்றவையே ஒரு மனிதனின் உயர்வாகவும் அழகாகவும் காணப்படுகின்றன.

**அகத்தின் அழகு:**

“அகத்தின் அழகு முகத்தில் தெரியும்” என்று கூறுவர். மனிதர்களின் அகமாகிய உள்ளம் அழகாக இருந்தால் அதாவது உள்ளத்தில் நேரிய எண்ணங்கள் இருந்தால், பிறர் மீது நல்ல எண்ணங்கள் இருந்தால், அந்த அழகு நம் முகத்தில் பிரதி பலிக்கும் என்பதே இந்தக் கூற்றின் பொருளாகும். இது முற்றிலும் உண்மையே உங்கள் முகம் எந்த உருவத்திலிருந்தாலும் உங்கள் உள்ளத்தின் அழகே உங்கள் முகத்தின் அழகாக அமைகின்றது. எனவே உங்கள் முகத்திற்கு நீங்கள் கொடுக்கும் மிகச் சிறந்த அலங்காரம், உங்கள் உள்ளத்தின் அழகேயன்றி வேறில்லை.

எனவே உங்கள் முகத்தின் அழகை மேம்படுத்திக் கொள்ள உங்கள் உள்ளத்தின் அழகை மேம்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் உள்ளத்தின் அழகை மேம்படுத்திக் கொள்ள உங்கள் உள்ளத்தை நேரிய எண்ணங்களால் நிறைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் இந்த உலகின் மிகச்சிறந்த படைப்பாவீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இறையாசீருடன்

அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா OFM Cap.

# இளையோர் தமது "இமேஜ்" பற்றிக் கவலைப்படுவது ஏன்

இதைத் தெரிந்து கொள்ள ஆறு வழிகளில் உங்களையே கூர்ந்து கவனியுங்கள். கூடுதலான ரீன் - ஏஜ் பருவத்தினருக்கு தங்கள் தோற்றத்தைப் பற்றி அதிக அக்கறையும், கவலையும் உண்டு. தங்களைப் பற்றிய கணிப்பிலிருந்து உருவாகும் எண்ணம் தான் அவர்களின் நிறைய நேரத்தை ஆக்கிரமித்துக் கொள்கிறது. ஆனால் இந்தக் கணிப்பு உருவாகுவதற்கு மற்றவர்களின் கணிப்பு மிகவும் அவசியம். இவர்களுக்கு கூடுதலானோர் என்னை cute, திறமைசாலி, beautiful, handsome என்கிறார்கள், எனது கணிதப்பாட ஆசிரியர் என்னை எப்போதும் குறை சொல்லிக்கொண்டே இருப்பார். எனக்குத் தெரியும் என் முடி நீளமாக, அழகாக இருக்கிறது என்று இந்த முகப்பரு மட்டும் இல்லாமல் இருந்தால் நான் அழகுதான். இத்தகைய கணிப்புகள் நாள்தோறும் தொடரத் தொடர பல கணிப்புகள் இணைந்து உங்களைப் பற்றிய ஒரு தோற்றத்தை உருவாக்கும். இந்த சுய தோற்றம் என்பது வெறுமனே விபரிக்கக் கூடிய கணிப்பு மட்டுமல்ல. ரீன் - ஏஜ் பருவத்தினர் தாங்கள் எவ்வளவு தூரம் அன்பு செலுத்தக் கூடியவர்கள், மதிப்பு மிக்கவர்கள் என்பதைப் பற்றி மதிப்பிட்டு கொண்டேயிருப்பார்கள். இந்தச் சுய தோற்றத்தைப் பற்றிய மதிப்பீட்டைத்தான் நாம் சுயமரியாதை அல்லது சுயமதிப்பு (Self Esteem) என்கின்றோம்.

இந்தச் சுய மதிப்பு என்பது சுய உணர்வு அல்ல உங்களைப் பற்றி நீங்கள் உணர்ச்சிபூர்வமாக நினைத்துக் கொண்டிருப்பதன் மொத்த வடிவம். தங்களைப் பற்றிய நல்ல/மோசமான எண்ணங்கள் ரீன் - ஏஜ் பருவத்தினர் அனைவருக்கும் உண்டு. உங்களைப் பற்றி நீங்கள் கொண்டுள்ள கணிப்புகள் நேர்மறையாக, உயர்வானதாக இருப்பின் உங்கள் அடையாளமும் உயர்வானதாக இருக்கும். மிகவும் தாழ்வான எதிர்மறையான கணிப்புகள் அதிகமாக கொண்டிருந்தால் உங்கள் அடையாளமும் அப்படிப்பட்ட ஒன்றாகத்தான் இருக்கக் கூடும்.

'fivecries of youth' என்ற புத்தகத்தில் மெட்டன் ஸ்டாரமென் என்பவர் ரீன் - ஏஜ் பருவத்தினரில் 20% சுயவெறுப்பில் வாழ்கின்றார்கள் எனக் கூறுகின்றார். மற்றவர்களுடன் தன்னை ஒப்பிட்டுப் பார்த்து சுய இரக்கத்துடன் தன்னையே இகழ்ந்து, நாளடைவில் வெறுப்பில் வாழ்கிறார்கள்.
இன்னுமொரு சுவையான தகவலும் உண்டு. 'The Inflated self' என்ற புத்தகத்தில் டேவிட்மயர் என்பவர் ரீன் - ஏஜ் பருவத்தினரின் மிகப் பெரும் பிரச்சனை தாழ்வு மனப்பான்மையல்ல, மாறாக உயர்வு மனப்பான்மை என்கிறார். இவருடைய ஆய்வின்படி நிறைய ரீன் - ஏஜ் பருவத்தினரின் சுயமதிப்பு கீழ்கண்டவாறு உள்ளது.



இளையோர் பக்கம் - 08

- தலைமை ஏற்கும் குணம் (Leadershihip Qualities)

  70% மிக அதிகமாக உண்டு
  20% சராசரிக்கும் குறைவு

- விளையாட்டுத் திறமை (Sports Talants)

  60% மிக அதிகமாக உண்டு
  06% சராசரிக்கும் குறைவு

- அறிவுத்திறன் (Inteligency)

  60% மிக அதிகமாக உண்டு
  0% சராசரிக்கும் குறைவு

நீங்கள் எப்படிப்பட்டவர்கள்? உங்களையே மிகைப்படுத்தி மதிப்புச் செய்து கொள்வீர்களா? அல்லது உங்களைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் வெறுப்பு உணர்வுதான் அதிகமாக உள்ளதா? நம்முடைய குடும்பங்களும், பாடசாலைகள், ஆலயங்கள், போட்டி மனப்பான்மையை வளர்க்கின்றன. படிப்பில், விளையாட்டில், கலை நிகழ்ச்சிகளில், அழகில், உடையில், பொருளாதாரத்தில் வெற்றி பெறுபவர்கள் தங்களைப்பற்றி உயர்வாக நினைக்கிறார்கள். கனவுலகில் மிதக்கிறார்கள். ஆனால் மீண்டும் மீண்டும் தோல்வியடைபவர்களை இரக்கத்துடன், வெறுப்புடன் பார்க்க பெரியவர்களே அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள்.
உங்கள் வாழ்க்கையில் தற்போதுள்ள கலைகளை வரிசைப்படுத்தி பாருங்கள்

- நண்பர்களைக் கண்டுபிடிப்பதும் தக்க வைத்துக்கொள்வதும்.
- கடவுளிடம் உள்ள உறவு
- நண்பர்கள் தொல்லை
- புகைப்பிடிக்கும் பழக்கம்
- மது அருந்துவது
- செக்ஸ் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பது
- என் எதிர்காலம் எப்படியிருக்குமோ என்ற பயம்
- உலகத்தில் இருக்கும் வறுமையும், பசியும்
- சாதியுணர்வு
- பணம்
- காதலில் தோல்வி
- என் பெற்றோர் இறந்து விடுவார்களே
- தனிமை
- என் பெற்றோருடன் ஒத்துப்போவது
- தற்கொலை எண்ணம்
- என் நிறம் / உயரம்
- வெற்றி பெறுவது
- பூகம்பம்? சுனாமி
- வீட்டில் என் சுதந்திரத்தை மதிக்காமலிருப்பது
- அலைபாயும் மனம்

அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்



வாழ்க்கை எல்லோருக்குமே எல்லைகளை விதித்திருக்கிறது. பெரும்பாலானோர் இந்த எல்லைக்குள்ளேயே தங்கள் வாழ்க்கையை வாழ கற்றுக்கொள்கிறார்கள். ஆனால் எல்லைகளை மீற முயற்சிப்பவர்கள் இளைஞர்களும், வளரிளம் பருவத்தினரும் தான் இவர்களால் மீற முடியும். இளங்கன்று பயமறியாது ஆனால் தேவையற்ற எல்லைகளை மீறாமல் இருப்பதற்கு மனப்பக்குவம் தேவை.



குழந்தைப் பருவத்தில் தாய் தந்தை, ஆசிரியர், மருத்துவர் என தன் உலகமே மற்றவர்களைச் சார்ந்திருக்க ரீன் - ஏஜ் பருவத்தில் இந்த உலகம் சற்றுக் குறுகி இதில் "தான்" முதன்மை பெறுகிறது. ரீன் - ஏஜ் பருவத்தினருக்கு முதலில் தேவை சுதந்திரம். எதற்கு சுதந்திரம் என்றெல்லாம் அவர்களைக் கேட்கக் கூடாது. தன் வழி செல்வதற்கும், தன் நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் தன் மனப்போக்கில் சிந்திப்பதற்கும் அவனுக்கு உரிமையும், சுதந்திரமும் வேண்டும். அவள் மனதுக்குள் ஆயிரம் இரகசியங்கள் உண்டு. ஆனால் அதை வெளியே சொல்லமாட்டாள் அவனுக்கு சைக்கிள், பைக், கார் என வசதிக்கேற்ப வாகனம் அவசியம். அவனுக்கு உடைகள் தான் தனித்துவத்தைக் காட்டும் குறியீடு. பெரியவர்களின் நம்பிக்கையும் மதிப்பீடுகளையும் இவர்கள் கேள்வி கேட்காமல் பரீட்சித்துப் பார்க்காமல் ஏற்பதில்லை.

உங்களுக்கு சுதந்திரம், அவசியம்தான், அதே சமயம் சுய உணர்வு, சுய சார்பு, சுய நம்பிக்கை இது சுதந்திரத்தின் கூறுகள் என்பதை மறக்கக் கூடாது. இந்த சுதந்திரம் அளவை மீறும்போது ஏற்படுகின்ற விபரீதங்களையும் மறக்கக்கூடாது பாடசாலை மாணவியை, மாணவனைக் காதலித்து ஏமாற்றி அவள் சாவுக்கும் அவன் சாவுக்கும் காரணமானவர்கள் ரீன் - ஏஜ் பருவத்தினர்தான். இன்று பல்கலைக் கழகங்களிலும் ஏனைய தனியார் கல்விக் கூடங்களிலும் ராக்கிங் என்ற பெயரில் நடக்கும் கொடுமைகளும், நகரப்பேருந்து வண்டிகளில், திரையரங்குகளில் நடக்கும் கலாட்டாக்களும் நமது ரீன் - ஏஜ் பருவத்தினரின் முதிர்ச்சியற்ற சுதந்திரத்தையே வெளிக்காட்டுகின்றது எனலாம்.

அண்மையில் குடும்பத்தினரை விட, உறவினரை விட எனக்கு வாழ்க்கையில் முக்கியமானவர்கள் என் நண்பன்தான் என வெளிவந்த திரைப்படம் ஒன்றில் கதாநாயகன் கூறும்போது மாணவர்கள் ஒரே கைதட்டு, வளரிளம் பருவத்தில் நட்பு என்பது சிறு பிள்ளைத்தனத்தை, பெற்றோரைச் சார்ந்திருப்பதை விட்டுவிடுவதற்கான ஒரு அளவுகோல், குழந்தையாக நீங்கள் கைகுலுக்கிக் கொண்ட உலகத்திற்கும், ரீன் - ஏஜ் பருவத்தில் நீங்கள் எதிர் கொள்கிற உலகிற்கும் நிறைய வித்தியாசங்கள். இந்தப் புதிய வாழ்க்கை விளையாட்டில் புதிய விதிமுறைகள் உண்டு. அதிகாரம் இடம்மாறும் தொடர்பு கொள்ளலில் உரசல்கள் உண்டு. சச்சரவுகள் சமரசப்படுத்தப்பட வேண்டும்.

இப்பருவத்தில் மற்றவர்களின் ஏற்றுக்கொள்ளலும், அங்கீகாரமும் உங்களையே நீங்கள் ஏற்றுக் கொள்வதற்கு மிக அவசியம். சரியான ஆதரவும் அந்த வயதில் மிக மிக அவசியம். சரியான ஆதரவும் அன்பும் கிடைப்பின் உங்களால் மிகப் பாதுகாப்பாக நட்பு செல்கின்றது என்பதை உணர முடியும். நட்பு சரியாக அமையாவிடில் அல்லது நீங்கள் நட்பை ஏற்றுக் கொள்ள மறுத்தால் நீங்கள் தனித்து விடப்படுவீர்கள். மற்றவர்களின் வெறுப்பையும் சம்பாதிக்கக் கூடும். அதேசமயம் உங்கள் அடையாளத்தை நிரூபிப்பதற்கும் வாழ்க்கையில் உயர்ந்த வெற்றி பெற்றவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வது மற்றும் அவர்களின் ஆலோசனையைக் கேட்பது பயனுள்ளதாக இருக்கும்.

இளையோருக்கான தேடல் தொடரும்....



# ஆண்டவரின் வார்த்தையின் வல்லமையை அறிந்து அவரது அதிகாரத்திற்கு தன்னை அர்ப்பணித்தவர் அன்னை மரியாள்

ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து வல்லமையுள்ள போதகராகவும், வல்லமையுள்ள புதுமை செய்கின்றவராகவும் உள்ளார். இயேசுவின் போதனைகளையும், புதுமைகளையும் நாம் செய்கின்ற போது, நாமும் வல்லமையுள்ளவர்களாக போதிக்கவும், வல்லமையுள்ள செயல்களை செய்ய முடியும் என்றும் சொன்னார். தம் சீடர்களுக்கு “நீங்கள் போய் நோய்களைக் குணமாக்கவும் பேய்களை ஓட்டவும். சிறைப்பட்டோரை விடுதலை செய்யவும் நற்செய்தி அறிவிக்கவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன்” என்றார்.

சீடர்கள் போய் இயேசு சொன்னதன்படியே அவருடைய அதிகாரத்தைக் கொண்டு நோய்களை நீக்கினார்கள், பேய்களை ஓட்டினார்கள் என்று இயேசுவிடம் வந்து சொல்வதைப் பார்க்கிறோம். இயேசுவும் நீங்கள் விசுவாசம் கொண்டிருந்தால் நான் செய்வதைப் போல உங்களாலும் வல்லமையான காரியங்களை செய்ய முடியும் என்கின்றார். அம்போஸ்தலரான இராயப்பர் ஆலயத்தை விட்டு வெளியே வரும் போது, எங்களிடம் பொன்னோ பொருளோ இல்லை, இயேசுவினுடைய வல்லமையுள்ள நாமம் இருக்கிறது. அந்த நாமத்திலே சொல்லுகிறேன் எழுந்து நட என்றார். அவன் எழுந்து நடந்தான்.

ஆக இயேசு ஆண்டவருடைய அதிகாரத்தையும் வல்லமையையும் உணர்ந்தவர்களாக நாம் இருக்கிறோமா? ஞானஸ்தானத்திலே பரிசுத்த ஆவியின் கொடைகள் நமக்கு வழங்கப்பட்டு இயேசுக்கிறிஸ்துவின் அதிகாரமும் இயேசுக்கிறிஸ்துவின் வல்லமையும் நமக்கு பொழியப்பட்டிருக்கிறது. அந்த வல்லமையோடும், அதிகாரத்தோடும் முழுமையாக செயல்பட்டவர் அன்னை மரியாள். ஆகவே தான் கானவூரிலே நின்று கொண்டிருந்த அன்னை மரியாள் ஆண்டவர் இயேசுவின் அதிகாரமும் வல்லமையும் நன்கு உணர்ந்த இயேசுவின் முதல் சீடராக அவர் சொல்வதெல்லாம் செய்யுங்கள் என்று சொல்லி இயேசுவின் வல்லமை வெளிப்படுவதற்கு முதல் காரணமாக இருந்தவர்.

அன்னை மரியாள் தன்னுடைய வாழ்க்கையிலேயே கடவுளுடைய வார்த்தையின் வல்லமையை உணர்ந்து அந்த வார்த்தை மனுவுரு எடுக்க இதோ ஆண்டவருடைய அடிமை, ஆண்டவருடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும் என்று தன்னை அர்ப்பணித்தவர் என்றும், எலிசபெத்து அம்மாள் வழியாக கடவுள் உரைத்தது நிறைவேறும் என்றும் நம்பியவளே நீர் பேறுபெற்றவர் என்றும் பார்க்கிறோம். ஆக இறைவார்த்தையின் வல்லமையை, இயேசுவின் வல்லமையை, இயேசு மனுவுருவான இறைவார்த்தை, அவருடைய வல்லமை நன்குணர்ந்து, அந்த வல்லமையானவருடைய அதிகாரத்தைக் கொண்டு இந்த உலகத்திலே நாம் ஆண்டவருக்கு அடிமையாக வாழ முற்பட்டால், ஆண்டவருடைய சீடர்களாக இருக்க முற்பட்டால், ஆண்டவருடைய வல்லமையான அரும்பெரும் செயல்களை நாம் காண முடியும் என்று நாம் பார்க்கிறோம்.

இறைவார்த்தையைக் கேட்கும் நமது மனநிலை என்ன? இறைவார்த்தைக்கு நமது பதிலளிப்பு என்ன? நமது பதிலளிப்பு கண்டுகொள்ளாமையாக அல்லது இறைவார்த்தையை ஏதோ மற்ற மனிதவார்த்தையைப் போல முழு விசுவாசத்துடனும், கீழ்ப்படிவுடனும் இறைவார்த்தைக்கு செவிமடுத்து அன்னை மரியாளைப் போல இறைவாக்கு நிறைவேறும் என்று நம்பி, இறைவாக்கின்படி வாழ்கிறோமா? வானதூதர் வழியாக இறைவார்த்தையை கேட்ட மரியாள் நான் ஆண்டவரின் அடிமை உமது சொற்படியே எனக்கு நிகழட்டும் என்று லூக்கா 1:38 இல் நாம் வாசிக்கின்றோமே.

மேலும் இறைவார்த்தையை மரியாள் எப்படி நம்பி தன்னை இறைவார்த்தைக்கு அர்ப்பணித்து இறைவார்த்தை நிறைவேறும் என்று நம்பினார்கள் என்பதை எலிசபெத்து அம்மாள் லூக்கா நற்செய்தி 1:45 ம் வசனத்திலே ஆண்டவர் உமக்கு சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர் என்று கூறுவதையும் நாம் பார்க்கிறோம். இயேசுவின் போதனையைக் கேட்ட கப்பர்நகூம் மக்கள் எல்லாரும் திகைப்படைந்து எப்படிப் பேசுகிறார் பாருங்கள் அதிகாரத்தோடும் வல்லமையோடும் தீய ஆவிகளுக்கு கட்டளையிடுகிறார் அவையும் போய்விடுகின்றனவே என்று ஒருவரை ஒருவர் பேசிக் கொண்டனர்.

அவரைப் பற்றிய பேச்சு சுற்றுப்புறமெங்கும் பரவியது என்று லூக்கா நற்செய்தி 4:36-37 வசனங்களிலே நாம் பார்க்கிறோம். இயேசு அதிகாரத்துடன் போதித்தார் இறைவார்த்தையை இதுவரை யாரும் இயேசுவைப் போல அதிகாரத்தோடும், வல்லமையோடும் போதித்ததில்லை. யூதப் போதகர்கள் போதிக்கையில் விவிலிய மேற்கோள்களையும் இறைவாக்கினர்களின் போதனைகளையும் மேற்கோள் காட்டி தங்கள் போதனைகளுக்கு வலு சேர்த்தனர், அதிகாரம் சேர்த்தனர். இறைவாக்கினர்கள் கூட கடவுள் வழங்கிய அதிகாரத்தைக் கொண்டு தான் ஆண்டவர் கூறுவது இதுவே Thus is the Lord என்று ஆண்டவருடைய அதிகாரத்தில் தான் போதித்தார்கள். ஆனால் இயேசு போதிக்கையில், அவருடைய போதனைக்கு வலுசேர்க்க எந்த அதிகாரமும் அவருக்கு தேவைப்படவில்லை. இயேசு மனுவுருவான அதிகாரம், மனுவுருவான இறைவாக்கு இயேசு பேசுகையில் கடவுள் பேசினார். தீயசக்திகளுக்கு இயேசு ஆணையிட்டார். தீய ஆவிகளும் அவருக்கு கீழ்ப்படிந்தன என்று பார்க்கிறோம்.

இயேசு தனது சொந்த ஊரில் ஜெபக்கூடத்தில் போதித்த போது சொந்த ஊர் மக்கள் அவரைப் புறக்கணித்தார்கள். அவரைப் புறக்கணித்ததோடு மட்டுமல்லாமல் மிக மோசமாக அவரைக் கட்டி இழுத்துச் சென்று மலையிலிருந்து தள்ளிக் கொல்லுவதற்காக முயன்றனர் என்று பார்க்கிறோம். ஆனால் ஏற்றுக்கொள்ளாத அந்த மக்கள், ஆண்டவருடைய வல்லமையையும், அவரது அதிகாரத்தையும் புரிந்து கொள்ளாத தம் சொந்த ஊர் மக்களுக்கு முற்றிலும் மாறுபட்டவர்களாக இயேசு நாசரேத்திலிருந்து புறப்பட்டு 30 மைல் தூரத்திலிருந்த கப்பர்நகூமுக்கு வருகிறார். இங்கு தான் இயேசு தனது பொது வாழ்வின் அதிகமான போதனைகளையும், புதுமைகளையும் நிறைவேற்றினார். நாசரேத்து மக்களைப் போலன்றி கப்பர்நகூம் மக்கள் இயேசுவுக்கு செவிமடுத்தனர். இயேசுவை வரவேற்றனர். இயேசு எங்களை விட்டு போக வேண்டாம். எங்களோடு தங்கும் என்று கேட்டுக் கொண்டார்கள். இங்கு தான் இயேசு பொதுவாழ்வுப் போதனைகள், புதுமைகள் அனைத்தையும் செய்தார்.

இருந்தும் நாசரேத்து மக்கள் இயேசுவில் நம்பிக்கை கொள்ளவில்லை. இயேசு கப்பர்நகூமிலும் நாசரேத்திலும் ஒரே மாதிரியாவே செயல்பட்டார். மக்கள் தான் இரு இடத்திலும் மாறுபட்டவர்களாய் செயல்பட்டனர். கப்பர்நகூமில் இயேசு பலரது இதயங்களை வென்றார். ஏனெனில் அங்கு மக்கள் விசுவாசம் என்னும் கொடைக்கு திறந்த மனமுடையவர்களாய் இருந்தனர். அதனால் தான் இயேசு கப்பர்நகூமை விட்டு வெளியே செல்லுகையில் இங்கேயே தங்கும்படி அவரை வேண்டிக் கொண்டார்கள் என்று வேதத்தில் வாசிக்கிறோம்.



ஆண்டவர் தம் வாழ்வில் வல்லமையோடு செயல்பட வேண்டும் என்று நாம் விரும்புகிறோமா? இயேசு நம் வாழ்வில் அதிகாரத்தோடும், வல்லமையோடும் செயல்பட நாம் அவர்மீது ஆசை கொள்கிறோமா? வாழ்வின் சோர்வையும், குழப்பத்தையும், பலவீனங்களையும் உணர்கிற மக்கள் நாம். நமக்கு தேவை கப்பர்நகூம் மக்களைப் போல, மரியன்னையைப் போல இயேசுவை வரவேற்று அவரில் நம்பிக்கை கொள்ளும் மக்களா நாம்? இயேசுவை எங்களோடு தங்கும் என்று வேண்டும் மக்களாக நாம்? இயேசு நம்மோடு தங்கி நம்மில் செயலாற்றுவது நம்மையும் இந்த கேள்விகளுக்கான நமது பதிலையும் பொறுத்தது. ஆண்டவரை அழைப்போம், நம்முடைய வாழ்வினுள் அனுமதிப்போம். மரியா இதோ ஆண்டவருடைய அடிமை உமது வார்த்தையின் படியே எனக்கு ஆகட்டும் என்று அர்ப்பணித்ததற்கு முன்பு ஆண்டவரால் ஆகாதது ஒன்றுமில்லை என்று வானதூதர் கூறியமை முழுமையாக நம்பினவர்.

மேலும் ஆண்டவர் கூறியது நிறைவேறும் என்று நம்பினவர் நீர் பேறுபெற்றவர் என்று எலிசபெத்து அம்மாள் கூறும் அளவுக்கு கடவுளின் அதிகாரத்தையும் வல்லமையையும் முழுமையாக நம்பி, அந்த வல்லமையான இறைவார்த்தை தம்வழியாக மனுவுருவாக தன்னை அர்ப்பணித்தவர். மரியாவைப் போல ஆண்டவரின் அதிகாரம் வல்லமையில் முழு நம்பிக்கை வைப்போம். அவரது அரும்பெரும் செயல்களை நம் வாழ்க்கையில் கண்டு அன்னையைப் போல ஆண்டவரைப் புகழும், ஆண்டவரைத் துதிக்கும், அவரது ஆன்மா ஆண்டவரை ஏற்றி போற்றியது போல, நம் ஆன்மாவும் ஆண்டவரை ஏற்றிப் போற்ற ஆரோக்கிய அன்னை வழியாக கனவில் புனித சூசையப்பர் வழியாக ஆண்டவர் வல்லமையோடும், அதிகாரத்தோடும் நம்மிலும் நம் குடும்பங்களிலும் செயற்பட்டு அன்று கப்பர்நகூம் ஜெபக்கூடத்திலே தீய ஆவி பிடித்தவனை விடுவித்தது போல, நம்மிடமிருக்கிற தீமைகள் எல்லாவற்றிலும் இருந்து நம்மை விடுவித்து ஆசீர்வாதம் வழங்கி நம்மை காப்பாராக.

மறைத்திரு. மரிய அந்தோணிராஜ்,
பாளையம் கோட்டை மறைமாவட்டம்.

**பசித்தவருக்கு உணவளித்தேன் என்னை புண்ணியவான் என்றனர். இவர்களுக்கு ஏன் உணவு கிடைக்கவில்லை என்று கேட்டேன். என்னை கம்யூனிஸ்ட் என்றனர்.**

## வரலாற்றை ஆக்கியோர் – 07

# போராளி சேகுவேரா



உலக அளவில் இன்று வரை புரட்சிக்கும், தியாகத்திற்கும் உதாரணமாகத் திகழ்கின்றவர் சேகுவேரா. கியூபா வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட மாவீரன். புரட்சியாளர், மருத்துவர், அரசியல்வாதி, இலக்கியவாதி எனப் பன்முகத்தன்மை கொண்ட போராளியாவார்.

“நான் சாகடிக்கப்படலாம் ஆனால் ஒருபோதும் தோற்கடிக்கப்பட மாட்டேன்” என்பதே இவரின் வைரவரிகளாகும். சேகுவேரா யூன் 14 1928ஆம் ஆண்டு அர்ஜெண்டினாவிலுள்ள ரொசாரியோ என்னும் இடத்தில் ஏர்னஸ்டோ குவேரா லின்ஞ் மற்றும் சிசிலியா தம்பதியினருக்கு மூத்த மகனாகப் பிறந்தார். இவர் ஓர் இடதுசாரி குடும்பத்தைச் சேர்ந்தவராவார். ஆஸ்துமா நோய் காரணமாக பெற்றோர் இவரை பள்ளிக்கு அனுப்பவில்லை. வீட்டிலிருந்தபடியே பாடங்களை படித்தார்.

வளர்ந்ததும் பள்ளிக்குச் சென்று புவன்ஸ் அயர்ஸ் பல்கலைக் கழகத்தில் மருத்துவம் பயிலச் சேர்ந்தார். ஆனால் 1956ல் ஓராண்டு விடுப்பு எடுத்துக்கொண்டு நண்பர் ஆல்பர்ட்டோவுடன் சேர்ந்து தொழுநோய்க்கு தன்னால் மருத்துவம் கண்டுபிடிக்க முடியும் என எண்ணி தென்னமெரிக்கா, அமேசன் முழுவதும் சுற்றித் திரிந்தார் பின் 1953 ஆம் ஆண்டு யூன் மாதம் கல்லூரிப் படிப்பினை முடித்து மருத்துவப் பட்டம் பெற்றார். சேகுவேரா புத்தகத்தின் மீது வைத்திருந்த காதலை வெளிப்படுத்தும் வகையில் தனது வீட்டில் 3000ற்கும் மேற்பட்ட புத்தகங்களை வைத்திருந்தார்.

**பிடல் காஸ்ட்ரோவுடனான சந்திப்பும், கியூபப் புரட்சியும்**

சேகுவேரா கவுதமாலாவில் இருந்த போது கியூப நண்பர்கள் வழியாக பிடல் காஸ்ட்ரோ பற்றி அறிந்திருந்தார். ஆட்சியில் இருந்த பாடிஸ்டா அரசுக்கு எதிராகப் பிடல்காஸ்ட்ரோ போராடிக் கொண்டிருந்தார். நண்பர் ஒருவரின் மூலம் சேகுவேராவிற்கு காஸ்ட்ரோவை சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. 1953ஆம் ஆண்டு கியூபாவில் நடந்த புரட்சிக்கான முயற்சி தோல்வியில் முடிவடைந்தது. அரசினால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட பிடல் காஸ்ட்ரோ மெக்சிக்கோ வந்திருந்தார் அந்த சமயத்தில் பிடல் காஸ்ட்ரோவை சந்தித்தார் சேகுவேரா.

இந்த சமயமே உலகை உலுக்க போகும் புரட்சிக்கான புள்ளி வைக்கப்பட்டது. கியூபப் புரட்சிக்கான திட்டம் தீட்டப்பட்டது. ஆட்கள் திரட்டப்பட்டனர் ஆயுதங்களும் சேர்க்கப்பட்டன. புரட்சியாளர்களுக்கு கொரில்லா பயிற்சி அளிக்கப்பட்டது. பாடிஸ்டா இராணுவத்தை முடக்க நீர் வழிப்பயணம் மேற்கொள்ள திட்டமிட்டு கிரான்மா எனும் கள்ளத் தோணியில் சேகுவேரா, காஸ்ட்ரோ உள்ளிட்ட 82 வீரர்கள் 1956ம் ஆண்டு கியூபாவிற்கு புறப்பட்டனர்.

1957ம் ஆண்டு இராணுவ தளபதி கொல்லப்பட்டார் இதுவே புரட்சியாளர்களின் முதல் வெற்றியாகும். 1958ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கியூபா தலைநகரான ஹவானா புரட்சிப்படை வசம் வந்தது. காஸ்ட்ரோவிடம் கியூப ஆட்சி வந்தது.

அதன் பின் பொலிவியா நாட்டின் விடுதலைக்கு போராட சென்ற சேகுவேரா அங்கு 1967 ஒக்டோபர் 9ம் திகதி பொலிவிய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதே ஆண்டு அக்டோர் 18ம் திகதியன்று கியூபாவின் தேசியக் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்க சேகுவேரா கொல்லப்பட்ட செய்தியை கியூப மக்களுக்கு அறிவித்தார் பிடல் காஸ்ட்ரோ.

ஒட்டுமொத்த கியூபாவும் சோகத்தில் மூழ்கியது சேகுவேராவின் உடல் பொலிவியாவிலுள்ள லவே கிறேன்தாவில் புதைக்கப்பட்டது. கியூபாவின் தொடர் வேண்டுகோளுக்கிணங்க 1997ம் ஆண்டு மீண்டும் தோண்டப்பட்டு சேகுவேராவின் எலும்புக்கூடுகள் ஒப்படைக்கப்பட்டன. தான் கொண்ட கொள்கைகளை எந்த சமரசமும் இன்றி நேசித்தவர் சேகுவேரா அதனால் தான் பிறப்பினால் ஓர் அர்ஜெண்டினரான சேகுவேரா கியூபாவிற்காகவும், காங்கோவிற்காகவும், பொலிவியாவிற்காகவும் போராட முடிந்தது. சேகுவேராவின் புரட்சி வரலாற்றில் நிலைத்திருப்பதன் காரணம் அது அன்பின் உன்னதத்தால் வழிநடத்தப்பட்டது என்றால் அது மிகையாகாது.

---

## கல்வித் திட்டத்திற்கான பங்குகள் ரீதியிலான தவக்கால சேகரிப்பு – 2023

| இல | பங்கு | தொகை |
|---|---|---|
| 1 | புனித சதாசகாய அன்னை ஆலயம் - கந்தளாய் | 5,000.00 |
| 2 | புனித மரியாள் பேராலயம் - திருகோணமலை | 28,160.00 |
| 3 | புனித சதாசகாய அன்னை ஆலயம் - அன்புவழிபுரம் | 26,160.00 |
| 4 | இறை இரக்கத்திருத்தலம் - அலஸ்தோட்டம் | 16,200.00 |
| 5 | புனித லூர்து அன்னை ஆலயம் - பாலையூற்று | 45,000.00 |
| 6 | புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் - சாம்பல்தீவு | 7,200.00 |
| 7 | புனித வேளாங்கண்ணி அன்னை ஆலயம் - ஆண்டாங்குளம் | 4,550.00 |
| 8 | திருஇருதய ஆண்டவர் ஆலயம் - இருதயபுரம் | 21,500.00 |
| 9 | புனித வனத்து அந்தோனியார் ஆலயம் - செல்வநாயகபுரம் | 10,000.00 |
| 10 | குழந்தை இயேசு ஆலயம் - உவர்மலை | 20,700.00 |
| 11 | புனித குவாடலூப்பே அன்னை ஆலயம் - திருகோணமலை | 10,000.00 |
| 12 | புனித சூசையப்பர் ஆலயம் - நிலாவெளி | 16,000.00 |
| 13 | கிறிஸ்து அரசர் ஆலயம் - கன்னியா | 7,110.00 |
| 14 | புனித பாத்திமா அன்னை ஆலயம் - தம்பலகமம் | 4,200.00 |
| 15 | புனித அந்தோனியார் ஆலயம் - சீனக்குடா | 5,320.00 |
| 16 | புனித அந்தோனியார் ஆலயம் - மூதூர் | 22,000.00 |
| 17 | புனித யூதாததேயு ஆலயம் - இலிங்கநகர் | 19,020.00 |
| 18 | புனித செபமாலை அன்னை ஆலயம் - குச்சவெளி | 26,440.00 |
| | மொத்தம் | **294,560.00** |

தகவல் – எகெட் கரித்தாஸ்

## திருமலைத்தீபம்... வாசகர்களே,

- திருமலைத்தீபம் பத்திரிகையின் வளர்ச்சிக்கு உங்கள் பங்களிப்பு அவசியமாகும்.
- உங்களிடமிருந்து சிறந்த ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.
- திருமலைத்தீபம் பத்திரிகை பற்றிய உங்கள் அபிப்பிராயங்களை தயக்கமின்றி எழுதவும்.
- பிறந்ததினம், முதல் நன்மை, திருமணம் போன்ற நிகழ்வுகள் இருப்பின் உரியவரின் புகைப்படத்தை பிரசுரித்து நன்றி தெரிவித்து மகிழுங்கள். (இதற்கான கட்டணம் அரைப்பக்கம், கால்ப்பக்கம் ஆகும்)
- “துயர் பகிர்கின்றோம்” பகுதியில் உங்கள் உறவினரை நினைவு கூறுங்கள். (இதற்கான கட்டணம் அரைப்பக்கம், கால்ப்பக்கம் ஆகும்)

நீங்கள் மேற்படி விடயங்கள் எதனையும் திருமலைத்தீபத்திற்கு கொடுப்பதாயின் குறைந்தது ஒரு மாதத்திற்கு முன் அறியத்தரவும்

○ எல்லோரும் பயணிக்கிறார்கள் என்று நீயும் பின்தொடராதே உனக்கான பாதையை நீயே தேர்ந்தெடு...

○ ஒரு விஷயத்தை உன்னால் கனவு காண முடியுமானால் அதை உன்னால் செய்து முடிக்கவும் முடியும்.

○ நான் வெற்றி பெற வேண்டும் என்று செயல்படுங்கள். நான் மட்டும் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத்தை கைவிடுங்கள்.

○ யாரோட அடையாளத்தையும் எடுத்துக் கொள்ளாதீர்கள், உங்களுக்கான ஒரு அடையாளத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**நான் சாகடிக்கப்படலாம் ஆனால் ஒரு போதும் தோற்கடிக்கப் படமாட்டேன்.**



"தென்றல் காற்றுக்குச் சொந்தமில்லை
தேன் பூவுக்குச் சொந்தமில்லை
மழை மேகத்திற்குச் சொந்தமில்லை
நீ உனக்குச் சொந்தமில்லை
உன்னையே நீ பகிரும் போது கிடைக்கும்
இன்பமே உன் சொந்தம்"

இரு உள்ளங்களை திருமணத்தில் இணைப்பது தான் அன்பு. ஒரு ஆணையும் ஒரு பெண்ணையும் திருமணத்தில் கணவன் மனைவியாக்குவதும் இந்த அன்பு தான்.

# திருமண அன்பும் பிணைப்பு

திருமண அன்பால் அல்லது உடன்படிக்கையால் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தங்கள் வாழ்வு முழுவதற்குமான ஓர் உறவுச் சமூகத்தைத் தங்களிடையே ஏற்படுத்துகின்றனர். எனவே திருமணத்தை திருச்சபைக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள புனித உறவு எனவும் தந்தையாம் கடவுள் ஏற்படுத்திய உடன்படிக்கை எனவும் வரையறுக்கமுடியும்.

கத்தோலிக்க திருமணமானது ஆதியிலே ஆதிப்பெற்றோரின் மூலமே உருவாக்கப்பட்டது. தொடக்கத்தில் மனிதன் தனியே இருப்பது நல்லதல்ல என எண்ணி அவனுக்குத் தகுந்த துணையாக பெண்ணை உருவாக்கி திருமண பிணைப்பை ஏற்படுத்தி வைத்தார். இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட திருமண பிணைப்பின் இன்றியமையாத முக்கிய பண்புகளாக

1. ஒருமைப் பண்பு (Unity)
2. முறிவு படாத பண்பு (Indissolubility)

இவைகளைக் குறிப்பிடலாம். இவ்வாறு திருமணம் என்ற உடன்படிக்கை மூலம் இருவரும் அன்புடன் வாழ்வது மட்டுமல்ல புதிய உயிர்களைப் பெற்றுத் தருவதற்குரிய நியமத்தை, உறுதியை, அனுமதியைப் பெற்றுத் தருகிறது.

எனவே தான் திருமணம் எனும் அன்புறவின் பிரிவுபடுத்த முடியாத பிணைப்பால் இணைக்கப்படும் தம்பதியர் தன்னலமற்ற அர்ப்பணிப்பால் ஒரு குடும்பமாக வாழ அழைப்புப் பெறுகின்றனர். இவ் உன்னத அழைப்பு தாம்பத்தியம் மூலம் அர்த்தம் பெற்று நிறைவுள்ளதாகின்றது.

**திருமதி. L.P. ஆன் ஜெரீன்**

# வாழ்க்கை

வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் - இதை நழுவ விடாதீர்கள்
வாழ்க்கை ஒரு பயணம் - அதை சென்று முடியுங்கள்
வாழ்க்கை ஒரு விடுகதை - அதை விடுவியுங்கள்
வாழ்க்கை ஒரு விளையாட்டு - அதில் ஈடுபடுங்கள்
வாழ்க்கை ஒரு போராட்டம் - அதை வென்று காட்டுங்கள்
வாழ்க்கை ஒரு வெகுமதி - அதை ஏற்றுக்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு போட்டி - அதில் வெற்றி பெறுங்கள்
வாழ்க்கை ஒரு கலை - அதை அழகுபடுத்துங்கள்
வாழ்க்கை ஒரு வேதனை - அதை தாங்கிக்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சவால் - அதை எதிர்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சோகம் - அதை கண்டு மனம் தளராதீர்கள்
வாழ்க்கை ஒரு பிரச்சனை - அதற்கு தீர்வு காணுங்கள்
வாழ்க்கை ஒரு மகிழ்ச்சி - அதற்காக நன்றியோடு செபியுங்கள்



**திருமதி. லொறேற்றா அருள்பிரகாசம்**

## ஆண் பெண் இருபாலரதும் உளவியல் வேறுபாடுகளை கணவனும் மனைவியும் அறிந்திருப்பது பரஸ்பர புரிந்துணர்வுக்குப் பேருதவியாக அமையும்.

உளவியலாளர்களின் ஆய்வின் அடிப்படையில் ஆண், பெண் இருபாலாருக்கும் இடையேயான உளவியல் வேறுபாடுகள் பல இருப்பதாக பெரும்பாலானவர்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஆண், பெண் இருபாலாரதும் உளவியல் வேறுபாடுகளை ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள கணவனும் மனைவியும் அறிந்திருப்பது அவர்களுக்கிடையே ஆன பரஸ்பர புரிந்துணர்வுக்குப் பேருதவியாக அமையும் என்பதில் எந்த விதமான மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. எனவே பெரும்பாலானவர்களில் அவதானிக்கப்பட்ட ஆண், பெண் உளவியல் வேறுபாடுகள் பலவாக இருப்பினும் மிக முக்கியமானவை சில கீழே தரப்படுகின்றன.

**1. பேசும் விடயங்கள் :** பெண்கள் பெரும்பாலும் தம் சொந்த உணர்வுகள், வாழ்வுப்பிரச்சனைகள் பற்றி பேசுவதையே விரும்புகின்றனர். ஆனால் ஆண்கள் பெரும்பாலும் தமது பொழுதுபோக்கு, விளையாட்டு, தொழில் பற்றியே அதிகம் பேச விரும்புகின்றனர். ஆண்களுக்கான உறவு நெருக்கத் தேவை பெண்களைவிடக் குறைவாக இருப்பதே இதற்குக் காரணமாக கருதப்படுகின்றது.

**2. தொடுகை:** பெண்கள் ஆண்களை தொடுவது மிகக்குறைவாக இருந்தாலும், ஆண்கள் பெண்களை தொடுவது மிக அதிகம் என்றே கூறலாம். இருப்பினும் ஆண்கள் பெண்களின் தோள்மீது கைபோட முயல்வதும், பெண்கள் ஆண்களின் கரங்களை கோர்த்துப் பிடிப்பதும் இயல்பு.

**3. சுய வெளிப்படுத்தல்:** ஆண்களை விடப் பெண்கள் தங்கள் உள்ளக் கிடைக்கைகள் பற்றி ஏனைய பெண்களிடம் அதிகம் வெளிப்படுத்த விரும்புகின்ற போதிலும், ஆண்கள் பிற ஆண்களுக்கோ, பெண்களுக்கோ தம்மை வெளிப்படுத்துவது, பெண்களை விட குறைவென்றே கூறலாம்.



**அருட்பணி. வ. அலன்** (I V DEI)

## திருச்சிலுவைமலை அமலமரி அன்னை பிரசீடியத்தின் 25 ஆவது வருட நிறைவுவிழா 01.03.1998 – 01.03.2023

அமலமரி அன்னை பிரசீடியம் தனது 25 ஆவது வருட நிறைவு விழாவினை பங்குனி மாதம் 6ம் திகதி திங்கட்கிழமை (06.03.2023) கொண்டாடியது.



அன்று காலை 11 மணிக்கு திருச்சிலுவைமலை ஆலயத்தில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் புதிய பங்குத்தந்தை அருட்பணி. றொஹான் பேர்னார்ட் மற்றும் முந்நாள் பங்குத்தந்தை அருட்பணி. சுதர்ஷன் அடிகளாரும் ஆயருடன் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்கள்.

இம்மகிழ்வின் திருப்பலியில் அன்னைத் தெரேசா அருட்சகோதரிகள், திருகோணமலை கொமித்தீசிய சகோதரிகள் மற்றும் பங்கு மக்களும் கலந்து சிறப்பித்தனர். திருப்பலி நிறைவில் கொமித்தீசிய சகோதரியினால் வாழ்த்துப்பா வாசிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அமலமரி அன்னைப் பிரசீடிய சகோதரிகளுக்கு ஆயரினால் பொன்னாடை போர்த்தப்பட்டு, அருட்பணி. சுதர்ஷன் அடிகளாரால் மலர்மாலை அணிவிக்கப்பட்டது. இவ் எதிர்பாராத கௌரவிப்பை திருச்சிலுவைமலை மறையாசிரியர்கள் ஆயத்தம் செய்திருந்தனர். தொடர்ந்து திருப்பலிக்கு வருகை தந்தோருக்கு பிஸ்கட் மற்றும் குளிர்பானம் வழங்கப்பட்டன. ஆயர், குருக்கள், அருட்சகோதரிகள், கொமித்தீசிய சகோதரிகள் மற்றும் அனைத்து பிரிசீடிய உறுப்பினர்களுக்கும் மதிய உணவு பரிமாறப்பட்டது. மதிய உணவுடன் அமலமரி அன்னை பிரிசீடியத்தின் 25 ஆவது வருட வெள்ளி விழா இனிதே நிறைவு பெற்றது. இவ்வாறான மறக்கமுடியாத நிகழ்விற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும் ஊக்கப்படுத்திய எமது பங்குத்தந்தைக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தகவல்: அமலமரி அன்னை பிரசீடியம்**

## புனித லூக்கா நற்செய்தி 21 – 24 அதிகாரங்கள்.

- எல்லோரும் பங்குபற்றலாம்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
- அதிர்ஸ்டசாலி குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

**பரிசுகள் முறையே 1ம் பரிசு 500/= 2ம் பரிசு 300/= 3ம் பரிசு 200/=**

**கேள்வி பதில்**

1. இயேசுவின் உடலை பிலாத்துவிடம் கேட்டது யார்?

விடை:..........

2. இயேசு பாஸ்கா விருந்துண்ண ஏற்பாடுகள் செய்யும் படி யாரிடம் கூறினார்?

விடை:..........

3. பேதுரு ஆண்டவரே உம்மோடு சிறையிடப்படுவதற்கும் ஏன், சாவதற்கும் நான் ஆயத்தமாய் உள்ளேன் என்றபோது இயேசு கூறியது என்ன?

விடை:..........

4. இயேசு உயிர்த்தெழுந்த பின் சீடர் நடுவில் தோன்றிக் கூறியது என்ன?

விடை:..........

5. இயேசுவை அறைந்த சிலுவையில் எழுதி வைக்கப்பட்டது என்ன?

விடை:..........

**சரி, பிழை எழுதுக.**

6. வறுமையில் வாடிய கைம்பெண்ணும் இரண்டிற்கு மேற்பட்ட காசுகளை அதில் போட்டார். (   )

7. நான் துன்பங்கள் படுமுன் உங்களோடு இந்தப் பாஸ்கா விருந்தை உண்பதற்கு மிக மிக ஆவலாய் இருந்தேன். (   )

8. விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும் ஆனால் என் வார்த்தை ஒழியவே மாட்டா. (   )

9. இயேசு ஒலிவ மலையில் வேண்டிக் கொண்டிருந்த போது விண்ணகத்திலிருந்து இரு தூதர்கள் அவருக்கு தோன்றினர். (   )

10. இயேசுவின் முகத்தை மூடி உன்னை அடித்தவன் யார்? இறைவாக்கினனே சொல் என்று கேட்டார்கள். (   )

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

11. பச்சை ________ இவ்வாறு செய்கிறார்கள் என்றால் ________ ________ என்னதான் செய்யமாட்டார்கள்.

12. ஒரு காலம் வரும் அப்போது ________ ________ ஒன்று இராதபடி இவையெல்லாம் ________

13. ஏனெனில் நானே உங்களுக்கு ________ ________ கொடுப்பேன்.

14. சோதனைக்கு உட்படாதிருக்க ________ இறைவனிடம் வேண்டுங்கள் என்றார்.

15. மலடிகள் ________ என்றும் பிள்ளை ________ பால் கொடாதோரும் ________ என்று சொல்வார்கள்.

பெயர் :..........

முகவரி :..........

பங்கு :..........

முடிவுத்திகதி 17.07.2023

## ஹாய் குட்டீஸ் திருவிவிலிய புதிர் போட்டி – 54 சபை உரையாளர் 1 – 12 அதிகாரங்கள்

1. ஞானம், அறிவு பெருகும் போது ஏற்படக்கூடியவை எவை?

விடை:..........

2. மடையர் என்று சொல்லப்படுபவர்கள் யார்?

விடை:..........

3. ஞானமுள்ளவரின் உள்ளத்தில் எத்தகைய வீட்டின் நினைவு இருக்கும்?

விடை:..........

4. மூடரின் சிரிப்பு எதற்கு ஒப்பிடப்படுகிறது?

விடை:..........

5. எத்தகைய தலைவனைக் கொண்ட நாடு நீடு வாழும்?

விடை:..........

..........

6. விலை உயர்ந்த நறுமணத் தைலத்தை விட மேலானது எது?

விடை:..........

7. தீயவர்களின் வாழ்வு எத்தகையதாய் இருக்கும்?

விடை:..........

..........

8. சாவை விடக் கசப்பானது எதுவென சபை உரையாளர் கூறுகின்றார்?

விடை:..........

9. பெண்கள் காட்டும் அன்பு எத்தகையானது?

விடை:..........

10. சபை உரையாளர் யாரின் மகன் யார்?

விடை:..........

11. சபை உரையாளர் எந் நாட்டின் அரசராவார்?

விடை:..........

12. சபை உரையாளரின் கருத்துப்படி வாழ்க்கையில் வீணானவையாக எதை கருதுகின்றார்?

விடை:..........

13. மூடரின் பேச்சினால் ஏற்படும் விளைவுகள்?

விடை:..........

14. துன்பம் வரும் வேளை நினைவில் கொள்ள வேண்டியது என்ன?

விடை:..........

..........

15. சபை உரையாளரின் கருத்துப்படி மனிதர் எவ்வாறு வாழ வேண்டும்?

விடை:..........

பெயர் :..........

முகவரி :..........

தரம் :..........

பங்கு :..........

முடிவுத்திகதி 17.07.2023

**வாழ்க்கையில் எதிரிகளே இல்லாமல் இருப்பவன் வாழ்க்கையை முழுவதுமாக வாழவில்லை என்று தான் அர்த்தம்**

# சிறுவர்களுக்கான போட்டி

## படத்திலுள்ள 05 வித்தியாசங்களைக் கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்





- பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01 இற்கு மாத்திரம் நிறந்தீட்டி படம் 02 இல் வித்தியாசங்களைக் கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

1ம் பரிசு – 500/- 2ம் பரிசு – 300/- 3ம் பரிசு – 200/-

பெயர் :......................................

முகவரி :......................................

தரம் :......................................

பங்கு :......................................

முடிவுத்திகதி 17.07.2023

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி – 43
## நீதிமொழிகள் ( 7 – 9 ) வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வா | | | | | | | | க | |
| | | | | | | | க | | |
| | து | | | | | | | | |
| | | | | | | | பா | | |
| | பே | | | | | | | | |
| | | | | | | | வி | | |
| மு | | | | | | | | | வெ |
| அ | | | | | | | | | |
| | | செ | | | | | | | |
| கா | | | | | | | | | |

1. வா ------ வ ------ வா -----
2. கா ------ ----- ற் ற ப் ----- டு ----- ய்
3. க ----- டு கொ ------ டே ------
4. வெ ------ ளை ப் ------ ள ம்
5. செ ------ கொ ------ ங் ------ ள்
6. மு ன் ------ ------ ய ற் ------ ரே
7. அ ன் ------ கூ ர் ------ ------ க் கு
8. வி ------ ப் பு ----- ளோ ----- ய்
9. து ------ ப் பீ ------ ----- ள்
10. வா ------ ற் ------ ------ யி ல்
11. பா ----- ள த் ------ ------
12. க ------ ------ ணி ------ ல்
13. பே ------ ------ ளி ------ யே

பெயர் :......................................

முகவரி :......................................

பங்கு :......................................

முடிவுத்திகதி 17.07.2023

## சிறுவர்களுக்கான கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டி
## நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்



1ம் பரிசு 500/= ரூபா
யூ. ஷெயாலின்
இல. 11/39, தொழிநுட்பக்கல்லூரி
அடைவீதி
அன்புவழிபுரம்

2ம் பரிசு 300/= ரூபா
பி. திலக்சினி
இருதயபுரம்
மூதூர்

3ம் பரிசு 200/= ரூபா
அ. நிரோஜிதன்
பாடசாலை வீதி
செல்வநாயகபுரம்



## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர்போட்டி ~ 52
## தீதிமொழிகள் 1 ~ 15



1ம் பரிசு 500/= ரூபா
ஜெ. ஷெனுவ்
மின்சார நிலையவீதி
மூதூர் – 07

2ம் பரிசு 300/= ரூபா
N. டனிற் ஷரோன்
செல்வநாயகபுரம்
திருகோணமலை

3ம் பரிசு 200/= ரூபா
பா. கேதுசன்
அலஸ்தோட்டம்
திருகோணமலை

## புனித லூக்கா நற்செய்தி
## அதிகாரம் 13 – 16

1ம் பரிசு 500/= ரூபா
R. Ivashree
இருதயபுரம்
மூதூர்



2ம் பரிசு 300/= ரூபா
பா. ஜெயசாந்தினி
அலஸ்தோட்டம்
திருகோணமலை

3ம் பரிசு 200/= ரூபா
ம. கீர்த்திகா
இல. 27, பேராலய வீதி
திருகோணமலை

**நீ ஊமையாய் இருக்கும் வரை உலகம் செவிடாய் தான் இருக்கும்.**

# மறைக்கல்வி நடுநிலைய நிகழ்வுகள்

**மறையாசிரியர்களுக்கான தவக்காலத் தியானம்**

**தமிழ் மற்றும் சிங்கள மறையாசிரியர்களுக்கான தவகக்காலத் தியானமானது குவாடலூப்பே அன்னை திருத்தலத்திலும், ஆண்டாங்குளம் புனித வேளாங்கன்னி அன்னை ஆலயத்திலும் 11.03.2023 அன்று இடம் பெற்றது.**







**23.03.2023 பாடசாலைகளில் கத்தோலிக்க திருமறையைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், ஞாயிறு மறைப்பாடசாலை ஆசிரியர்களுக்குமான கருத்தமர்வானது இந்தியாவிலிருந்து வருகை தந்த அருட்பணி. சின்னப்பன் அடிகளாரால் நிகழ்த்தப்பட்டது.**





**பயிலுனர் ஆசிரியர்களுக்கான கருத்தமர்வானது 18.03.2023 அன்று ஆசிரியை திருமதி ஜெயவதனி மரியதாஸ் (I.S.A) அவர்களால் மறைக்கல்வி நடுநிலையத்தில் நடாத்தப்பட்டது.**



**க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான கத்தோலிக்க திருமறை பாடமீட்டல் கருத்தமர்வானது திருமதி. பிரசாந்தினி டொமினிக் நிலோஜன் ஆசிரியரால் 22.04.2023 அன்று மறைக்கல்வி நடுநிலையத்தில் நடாத்தப்பட்டது.**



## பாலையூற்று புனித லூர்து அன்னையின் திருவிழா கொண்டாட்டம்





பாலையூற்று புனித அமலோற்பவ லூர்துமலை நாயகியின் வருடாந்த பெருவிழா 14.05.2023 அன்று வெகு விமரிசையாக நடைபெற்றது. வைகாசி மாதம் 5ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா கொண்டாட்டம் சனிக்கிழமை (13.05.2023) காலை செபமாலை யாத்திரை பவனியும், மாலை திருப்புகழ் மாலை வழிபாடும், இடம் பெற்று மறுநாள் காலை திருகோணமலை மறைமாவட்ட ஆயர் தலைமையில் திருவிழா கூட்டுத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. செபமாலை யாத்திரை பவனியில் பொது அருட்பணியாளர்களும் பல பங்குகளில் இருந்து வருகை தந்த இறைமக்களும் பங்கெடுத்தமை சிறப்பம்சமாகும். பொதுநிலையினர் ஆண்டின் கருப்பொருளில் பகிரப்பட்ட திருவிழா மறையுரை சிந்தனைகள் இறைமக்களுக்கு சிறந்ததொரு ஆன்மீக ஆயத்தமாக காணப்பட்டது. அன்னையின் பரிந்துரை எப்பொழுதும் நம்மோடு இருக்கும். (பாலையூற்று பங்குச்சமூகம்)

# துயர் பகிர்கின்றோம்

## ஆண்டவரோடு துயில்கொள்ளும் அருட்பணி
## அமரர் N.C அருள்வரதன் அடிகளார்



**பிறப்பு – 1950.08.25**

**இறப்பு – 2023.05.07**

**முந்நாள் மறைக்கல்வி நடுநிலை இயக்குனர் இயற்கை எய்தினார்.**

## அமரர். திருமதி. டொனடா மேசி இம்மானுவேல்



**பிறப்பு – 1934.05.24**

**இறப்பு – 2023.03.22**

**அமரர் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களின் தாயார் ஆவார்.**

**“தந்தையே உம் திருமகனோடு அவருடைய மரணத்தில் ஒன்றாக இணைக்கப்பட்ட இவர்கள் உயிர்ப்பிலும் அவரைப் போலவே இருக்கச் செய்தருளும்”**